ISSN : 2455-0531

இனம் இனத்தைச் சேரும்!

இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர் : 1 இதழ் : 2, ஆகஸ்ட் 2015 Vol. I Issue 2, August 2015


மொழியியல்

சிறப்பிதழ்

தொகுதி 2 டிசம்பர் – பிப்ரவரி எண் 3

எழுத்துச் சீர்திருத்த மலர்

பதிப்பாசிரியர்கள்
ச. அகத்தியலிங்கம்
செ. வை. சண்முகம்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்
காலாண்டு இதழ்
1979



உ. ஜோசப் இருதயராஜ் கொடுமுடி சண்முகம்

க. பாலாஜி R. Nithya ந. இராஜேந்திரன்

மு. முனீஸ்மூர்த்தி மதிப்புரை

inam:International Research E Journal Tamil Studies

Inam ISSN : 2455 - 0531

இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

பதிப்பாசிரியர்

முனைவர் முமுனீஸ்மூர்த்தி.
முனைவர் தசத்தியராஜ்.

ஆசிரியர்குழு

முனைவர் சிலம்பு நா. செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ஆ. மணி (புதுச்சேரி)
முனைவர் க. பாலாஜி (கோவை)
முனைவர் ந. இராஜேந்திரன் (பெருந்துறை)
முனைவர் சி. இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப. சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச. முத்துச்செல்வம் (கோவை)

வெளியிடுபவர்

முனைவர் தசத்தியராஜ்.
கோவை
9600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

ஆகஸ்ட் 2015 மலர் : 1 இதழ் : 2
August 2015 Volume I Issue 2

உள்ளே ...

கவிஞர் வெள்ளியங்காட்டான் பார்வையில் பிரம்மம்

உ.ஜோசப் இருதயராஜ் 3

பொறித் தமிழ்

கொடுமுடி சண்முகம் 10

பெருங்கற்காலத் தமிழ்ச் சமூகமும் 'தமிழி' எழுத்துப் பொறிப்புகளும் (தொல்லியல் களஆய்வை முன்வைத்து)

முனைவர் க.பாலாஜி 17

Nature resister: English & Tamil Poets

R.Nithya 26

வேந்தர்களின் தலைவிதியை வரையறுத்தவன் மலையமான் திருமுடிக்காரி

முனைவர் ந.இராஜேந்திரன் 29

சி.வை.தா.வுக்கான அடையாளம் : செய்தனவும் செய்ய வேண்டுவனவும்

மு.முனீஸ்மூர்த்தி 37

இலக்கணமறியாக் கவிதை - நூல்மதிப்புரை

முனைவர் மு.ஐயப்பன் 42

கவிஞர் வெள்ளியங்காட்டான் பார்வையில் பிரம்மம்

உ. ஜோசப் இருதயராஜ்,
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
பெரியார் உயராய்வு மையம்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி - 620 024.
u.puratchitamizhan83@gmail.com

உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியில் மனிதனே உச்சம். மனிதனின் பரிணாம வளர்ச்சியில் அறிவே உச்சம். அறிவு வளரவளர மனிதன் வளர்கிறான். மனிதன் வளரவளர அறிவு வளர்ச்சியடைகிறது. அறிவு வளர்ச்சிக்கு உலகின் அனைத்து மனித இனங்களும் தங்களின் பங்களிப்பைச் செய்துள்ளன. உலகின் ஒவ்வொரு பெருநிலப்பரப்பும் (நாடு) ஒரு குறிப்பிட்ட அறிவு வயப்பட்டதாக, ஒரு குறிப்பிட்ட சிந்தனையைத் தன் வாழிடத்திற்கு ஏற்ப வளர்த்தெடுத்துள்ளது. இந்நிலையில் இன்றைய இந்தியா என்ற பண்டைச் சிந்து நிலவெளிப்பரப்பில் ஆன்மீகத்தை முன்னிறுத்திய அறிவு அதாவது மெய்ஞ்ஞான விஞ்ஞானம் என்ற அறிவுத்துறை வளர்ந்துள்ளது. இதில் 'பிரம்மம்' என்ற கருத்தாக்கத்தைக் கவிஞர் வெள்ளியங்காட்டான் வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

கவிஞர் வெள்ளியங் காட்டான் சிறுகுறிப்பு

கவிஞர் வெள்ளியங்காட்டானின் இயற்பெயர் இராமசாமி. பெற்றோர் நாராயணசாமி நாயுடு, காவேரியம்மாள். இவர் கோவை மாவட்டம் வெள்ளியங்காடு என்ற கிராமத்தில் 21.08.1904 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் 1942 முதல் கவிதை, காவியம், கட்டுரை, சிறுகதை, பொன்மொழிகள், மொழிபெயர்ப்புப் போன்ற படைப்புகளைப் படைத்துள்ளார். சிலகாலம் கோவையிலிருந்து வெளிவந்த நவஇந்தியா இதழில் மெய்ப்புத்திருத்துநராகப் பணியாற்றியுள்ளார். 1960 முதல் கர்நாடகம் சென்று கன்னடம் கற்றுக் கன்னடப்படைப்புகள் பலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். 1991 – இல் தனது 87ஆம் வயதில் காலமானார்.

இவர் வைதீகத்தின் ஒரு தத்துவப் பிரிவான அத்துவிதச் சிந்தனையை முன்னிறுத்தி ஆன்மீகத்தின்வழிப் பொதுவுடைமையை வலியுறுத்தும் சிந்தனையாளர்களுள் ஒருவர். மேலும் இவர் சித்தர்களின், குறிப்பாகத் திருமூலர் வழிச் சைவசமயம் மற்றும் சிவனை முன்னிறுத்தும் சிந்தனையாளர்.

பல கடவுள் வழிபாடும் ஓரிறைக் கோட்பாடும்

மனிதன் என்று சிந்தித்தானோ அன்றே வழிபாடும் தோன்றிவிட்டது. மனிதன் தனக்குப் பயனுடையவைகளையும், பயத்தை ஏற்படுத்துபவைகளையும், குல முன்னோரையும் வழிபட்டு வந்தான். இந்நிலையில் சிந்தனை வளர்ச்சியின் விளைவாகவும், பேரரசு உருவாக்கத்தின் விளைவாகவும் ஒரே உலகம், ஒரே அரசன், ஒரே கடவுள் கோட்பாடு முன்வைக்கப்பட்டது. இதற்கு ஏற்றாற்போல் ஒவ்வொரு பெருநிலமும் (நாடு) ஒரு குறிப்பிட்ட கடவுளை முன்னிறுத்தியது.

“பலகடவுள் கொள்கையிலிருந்து ஒரு கடவுள் கொள்கைக்கு முன்னேறியதை அடையாளப்படுத்தும் கட்டங்கள் இருந்தது என்பதற்குத் தலைமைக் கடவுள் கோட்பாடு ஒரு சான்றாக உள்ளது. மேலும் வேதகால ஆரிய இனத்தினரின் சமயம் பலகடவுள் சமயமாக இருந்தது என்ற பொதுவான கருத்திற்கு அப்பால் கடவுள் கருத்தில் அபிவிருத்தி இருந்தது அல்லது தனி முதல் கடவுள் எண்ணக் கருவை அவர்கள் உணர்ந்திருந்தார்கள் எனக் கருதலாம். இதற்காக “இருப்பது ஒரே ஒரு உண்மைதான் ஞானியர் அதைப் பல்வேறு பெயர்களால் அழைக்கின்றனர்” என்ற புகழ் பெற்ற வேதப்பாடலை இங்குச் சுட்டிக்காட்டலாம். எனினும் முழுமுதல் கடவுள் சார்பான வழிபாட்டு அமைப்புக்களில் மேலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டியிருந்தன” என்கிறார் எம்.எஸ்.எம்.அனஸ் (2006:73,4).

அத்துவிதத்தின் அடிப்படை

கடவுள் ஒருவனே அவனே பிரம்மன். அதுவே உண்மை, அதுவே சத்தியம் அனைத்தின் உட்பொருளாக இருப்பது அதுவே. அனைத்தின் இயக்கமாக இருப்பதும் அதுவே. எனவே எவன் பிரம்மத்தை நேசிக்கிறானோ, எவன் பிரம்மத்தை ஒளியுடையதாக்குகிறானோ அவனே பிரம்மமாகிறான். அவனே கடவுளாகிறான். ஏனெனில் பிரம்மம் உனக்குள் உள்ளது, புறத்தே இல்லை. இந்த உலகத்தில் உள்ள அனைத்தின் உட்பொருளாக இருப்பது பிரம்மம். இந்த உலகமே பிரம்மத்தால் ஆனது என்ற ஒற்றைக் கடவுள் கோட்பாட்டை வலியுறுத்தக்கூடியது அத்துவிதம்.

பிரம்மம் விளக்கம்

கவிஞர் வெள்ளியங்காட்டான் உபதேசத்தின் வழியும், திருமந்திரத்தின் வழியும் பிரம்மத்திற்கான விளக்கத்தைக் கொடுக்கிறார். “ஓம்பிரம்மம்” ‘ஓம்’ எனும் இந்த ஒரு எழுத்துதான் பிரம்மம் என்கிறது உபநிசத்து (கவிஞர் வெள்ளியங்காட்டான் படைப்புகள் தொகுதி – 2:478).

'ஓம்' எனும் எழுத்தின் பொருளை உபநிசத்து நமக்கு மேலும் விவரித்து விளக்குகிறது. அதுவே நான், அதுவே ஆத்மா, அதுவே சுகம் மற்றும் அதுவே பிரணவம், சக்தி, பிரம்மம், கடவுள், தெய்வம் எனப்பல்வேறு பெயர்களை இட்டு வழங்கும் பரம் என்றும் கூறுகிறது (கவிஞர் வெள்ளியங்காட்டான் படைப்புகள் தொகுதி –2 :478).

"பிரம்மம் – கடவுள் தன்னந்தனியாக, தனி ஒன்றாக வானிலோ, மண்ணிலோ இருக்கவில்லை. அது பொருளோடு ஒன்றியுள்ளது. நான், நீ, அவன், அது, அவை எனும் ஒவ்வொரு சடப் பொருளிலும் ஒன்றியுள்ளது. எனவே, உன்னிடமுள்ள அந்த ஆத்மாவை நீ உன் அறிவைக் கொண்டு உணர்ந்துகொள். உன் தெய்வத்தை நீ ஆராதனைசெய், போற்று. சுருங்கக் கூறின் உன்னை நீ போற்று உன்னைப் பிறர் தூற்ற என்றும் இடம் கொடாதே உனக்கு நீயே சாட்சியாக இரு என்கிறார் (கவிஞர் வெள்ளியங்காட்டான் படைப்புகள் தொகுதி–2:478) என்பதன் மூலம் பிரம்மம் உன் ஆத்மாவில் உள்ளது. அதை அறிவைக் கொண்டே அறியமுடியும், அதை அறிந்து உன்னை வளர்க்கப் பயன்படுத்து. ஆனால் தவறாகப் பயன்படுத்தி மக்களுக்குக் கெடுதல் விளைவித்து உன்னைத் தூற்றும் நிலையை ஏற்படுத்தி விடாதே என்ற கருத்தை வெளிப்படுத்துகிறார்.

"எதை நீ உன் கண்ணால் பார்ப்பதில்லையோ, ஆனால் எதனால் உன் கண்கள் பார்க்கப்படுகின்றதோ, அது பிரம்மம் என்று அறி. எதை 'இது பிரம்மம்' என்று சுட்டிக்காட்டி உபாசிக்கிறதோ அது பிரம்மம் அன்று என்கிறது. மேலும் ஓர் உபநிஷத்" என்கிறார் (கவிஞர் வெள்ளியங்காட்டான் படைப்புகள் தொகுதி–2:479) அனைத்திலும் உட்பொருளாக இருப்பது பிரம்மம் அதனை உணர முடியுமே தவிர கற்பிக்க, கற்க முடியாது என்பதனை வெளிப்படுத்துகிறார் கவிஞர்.

பிரம்மத்தின் வடிவம்

பிரம்மத்தின் தன்மைகளை உபநிசத்தின்வழி முன்வைத்த கவிஞர் வெள்ளியங்காட்டான் பிரம்மத்தின் வடிவத்தை வரையறுக்கிறார். "அந்தம் பிரம்மம் மனோவடிவமாயுள்ளது. உயிரை உடலாய்க் கொண்டுள்ளது. சத்தியமே சங்கல்பம் - குறிக்கோள், ஆகாசம் போலும் அதுவே ஆத்மா - பிரம்மம்". 'பிரம்மம்' எது; எது வாக்கால் விளக்கப்பெறாதோ, ஆனால் வாக்கு எதனால் விளக்கப்பெறுமோ அதுவே

பிரம்மம் என்று நீ அறி. எதை இது பிரம்மம் என்று உபாசிக்கிறார்களோ அது பிரம்மம் அன்று என்கிறது' கோனோபநிஷத்து.

'எதை ஒருவன் மனதால் உணருவதில்லையோ, ஆனால் மனது எதனால் உணரப்பெறும் என்று கூறுகிறார்களோ அதுவே பிரம்மம் என்று நீ அறி எதை அது பிரம்மம் என்று உபாசிக்கிறார்களோ அது பிரம்மமன்று'.

'எதை ஒருவன் கண்ணால் பார்ப்பதில்லையோ ஆனால் எதனால் கண்கள் பார்க்கப்படுகிறதோ அதுவே பிரம்மம் என்று நீ அறி. 'எதை இது பிரம்மம் என்று உபாசிக்கிறார்களோ அது பிரம்மமன்று' (கவிஞர் வெள்ளியங்காட்டான் படைப்புகள் தொகுதி – 2:508) என்ற உபநிஷத்து வரிகளின் மூலம் வாக்கால் விளக்கப் பெறாதது. ஆனால் வாக்கை இயக்குவது, மனதால் உணர முடியாதது. ஆனால் மனம் ஒன்றை உணரக் காரணமாக இருப்பது கண்ணால் பார்க்க இயலாதது. ஆனால் கண் பார்ப்பதற்குக் காரணமாக இருப்பது, பிரம்மம் என்று பிரம்மத்தின் வடிவத்தை வரையறுக்கிறார் கவிஞர் வெள்ளியங்காட்டான்.

அறிவே பிரம்மம்

பிரம்மத்தைப் பல்வேறு நிலைகளில் விளக்கும் கவிஞர் வெள்ளியங்காட்டான் இறுதியாக அறிவே பிரம்மம் என்கிறார். மேற்கண்ட உபநிஷத்துக்களின் கூற்றுப்படி அனைத்தின் உட்பொருளாக இருந்து, உயிரை இயக்குவது அனைத்தையும் அறியவைப்பது, இயங்கவைப்பது. இதனை "நாம் ஒரு பொருளை அறிவதற்கு முன்னரே, அப்பொருள் அறிவாற்றலாக விளங்கும் பிரம்மத்தால் வெளிப்படுத்தப்பட்ட நிலையில்தான் அமைந்திருக்கிறது. இது நமக்குத் தெரிவதில்லை. நம் உணர்விற்கும், பொருளுக்கும் தொடர்பு ஏற்பட்டவுடன் இதுவரையிலும் தெரியாத ஒன்று நமக்குத் தெரிய வகைபிறக்கிறது. இதனால் பண்டத்தை அறிகிறோம் 'நான் பாண்டத்தை அறிகிறேன்' நான் பாண்டத்தை அறியவில்லை என்கிற இவ்விரு கூற்றுகளும் பிரமத்தை அடிப்படையாகக் கொண்டே பிறக்கின்றன என்கிறார் மகாதேவன் (அத்துவித தத்துவம்:20).

ஓர் உயிரியின் அறிவாக இருந்து இயக்குவதே பிரம்மம் என்கிறார் கவிஞர் வெள்ளியங்காட்டான். பிரம்மத்தின் உறைவிடமாக ஆத்மாவைக் குறிப்பிடுகிறார். ஆத்மாவின் தன்மையைப் பற்றி "ஆத்மா என்பது கண்ணைப் போல எந்தப் பொருளின் மீது சத்தியத் தன்மையும், நித்தியத் தன்மையும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதோ, அந்தப் பொருளை ஆத்மாவானது அறிவினால் பற்றிக்கொள்கிறது, அறிந்து

கொள்கிறது. அந்த ஆத்மாவே அறிவுமயமாக விளங்குகிறது. பிறப்பு, இறப்பு என்கிற அந்தகாரத்தினால் சூழப்பட்ட பொருள்களின்மீது அந்த ஆத்மா நாட்டஞ் செலுத்துமானால் அந்தப் பொருள்கள் மங்கலாகவே அதற்குப்படுகின்றன. அப்பொழுது அதற்கு அந்த ஆத்மாவுக்கு அபிப்பிராயம் என்பதுதான் உண்டே தவிர அறிவு இல்லையென்று ஏற்படுகிறது. இந்த அபிப்பிராயமும் அடிக்கடி மாறுபாட்டைகிறது" என்கிறார் சாக்ரடீஸ் (2005:223).

இதன் மூலம் அறியும் தன்மை கொண்டது ஆத்மா. அதுவே சத்தியம் என்பதன் மூலம் அதுவே கவிஞர் வெள்ளியங்காட்டான் குறிப்பிடும் பிரம்மம் என்பதும்; அதன்வழி அந்த அறிவை நேர்படுத்தினால் உலகம் நேர்படும். அதற்கு ஆத்மாவை நேர்படுத்த வேண்டும், சத்தியத்தின்படி வாழ வேண்டும் என்ற கருத்து வெளிப்படுகிறது.

சத்தியமே பிரம்மம்

பிரம்மத்தின் பல்வேறு நிலைகளில் ஒன்றாகவும் அதன் நோக்கமாகச் சத்தியத்தைக் குறிப்பிடுகின்றார் கவிஞர் வெள்ளியங்காட்டான் "உபநிஷத்து நமக்குச் சுட்டிக்காட்டும் பிரம்மம் 'அகம் பிரம்மாஸ்மி' – நானே பிரம்மமாயுள்ளேன்' என்பதாகும்; இது தன்னையறிந்த நிலை: ஒவ்வொருவரும் சத்தியத்தை அறிந்து வாழ்க்கையில் மேற்கொண்டொழுகத் தூண்டும்நிலை உலகில் அமைதியும் ஆனந்தமும் நின்று நிலவச் செய்யும் தெய்விகநிலை என்றும் (கவிஞர் வெள்ளியங்காட்டான் படைப்புகள்தொகுதி –1:387)

"எப்படிப் பார்த்தாலும் சத்தியம்தான் பிரம்மம் என்பது உபநிஷத்துக்களின் முடிந்தமுடிபு" (கவிஞர் வெள்ளியங்காட்டான் படைப்புகள் தொகுதி –2:505) என்ற வரிகள் மூலம் சத்தியமே பிரம்மம் என்பதை வலியுறுத்துகிறார்.

சிவனே பிரம்மம்

அனைத்தின் உட்பொருளாக உள்ள அறிவே பிரம்மமென்றும், சத்தியமே பிரம்மமென்றும் எடுத்துரைக்கும் கவிஞர் வெள்ளியங்காட்டான் சிவமே பிரம்மமென்றும் அறிவே சிவன், சத்தியமே சிவனென்றும் கூறுகிறார்.

"ருதம் – விவகார உண்மை: உலகில் காணும் ஒழுங்கும் அழகும்: சத்தியம் – உலகின் ஒழுங்குக்கும் அழகுக்கும் அடிப்படையான பரமாத்திக உண்மை. இதனையே 'சத்தியம் சிவம்சுந்தரம்' என்றும் குறிப்பிடுவர் ஆன்றோர் என்கிறார் (கவிஞர் வெள்ளியங்காட்டான் படைப்புகள் தொகுதி –1:387)

அறிவைச் சிவனென்று விளக்கும் கவிஞர் திருமந்திரப் பாடலை மேற்கோளிடுகிறார்.

“சிந்தைய தென்னன் சிவனென்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெரியத் தெரியவல்லார் கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந்தா னன்றே”

(கவிஞர் வெள்ளியங்காட்டான் படைப்புகள் தொகுதி –2:507)

என்ற அடிகளின் மூலம் சிந்தையே, அறிவே சிவன் என்ற கருத்தை வெளிப்படுத்துகிறார்.

சிவனே பிரம்மம்

பிரம்ம தத்துவத்தை விளக்கும் இராகுல சங்கிருத்தியாயன் “சைவ உபநிஷத் தானஸ்வே தாஸ்வர உபநிஷதம் பிரம்மம் என்றால் தனது இஷ்ட தேவதையான ‘சிவன்’ என்று பொருள் சொல்லுகிறார் (1985:65).

அதன் வழியில் கவிஞர் வெள்ளியங்காட்டான் “ஈசனும் நீயும் வேறு வேறல்ல, தேனும் இனிமையும் வேறாகாதது போல என்று தெரிவிக்கிறார் திருமூலர் என்று கூறுகிறார் (கவிஞர் வெள்ளியங்காட்டான் படைப்புகள் தொகுதி –2:543).

அனைத்தின் உட்பொருளாக இருப்பது பிரம்மம் என்று கூறும் கவிஞர் வெள்ளியங்காட்டான் எங்கும் உட்பொருளாக பிரம்மமாக இருப்பது ஈசனே என் கிறார். உபநிஷத்துக்கள்வழி

“இங்கேபார் தெய்வமதோ அங்கேபார் தெய்வமென
எங்கே பார்த்தெய்த இயம்பிடினும் – எங்கும்
இருப்ப துருவன்றி யீச னஃதன்றென்
றுரைப்ப துபநி சத்து” (கவிஞர் வெள்ளியங்காட்டான் படைப்புகள் தொகுதி –2:63)

என்ற உபநிஷத்து அடிகள்வழி அனைத்திலும் இருப்பது ஈசன் என்கிறார். இதன்வழி அனைத்தின் உட்பொருளாக இருந்து அனைத்தையும் இயக்குவதே சிவம் என்ற கூற்றை வெளிப்படுத்துகிறார் கவிஞர் வெள்ளியங்காட்டான்.

தொகுப்புரை

- உலகையே ஒரு குடைக்குள் கொண்டு வரவேண்டும். இனத்தால் மனிதன் வேறுபட்டாலும் ஒன்றே குலம் என்ற கோட்பாடு தோற்றம் பெற்ற காலத்தில் பலகடவுள்முறை ஒழிந்து ஓரிறைக் கோட்பாடு தோற்றம் பெற்றது. அது அத்துவித தத்துவமாக வடிவம் பெற்றது.
- பிரம்மம் என்றால் அனைத்தின் உட்பொருளாக இருப்பது உலகத்தில் உள்ள அனைத்தும் பிரம்மத்தால் இயக்கப்படுகிறது. அதுவே பிரம்மம், அதுவே

உண்மை, அதுவே சத்தியம், அதுவே அறிவு. எனவே அறிவை ஒளிபெறச் செய்தால் நீ கடவுளாவாய், நீ பிரம்மமாவாய் அதன் மூலம் நான்; கடவுள் என்ற உண்மையை வெளிப்படுத்துகிறார்.

- நாம் உண்மையாக சத்தியவானாக வாழ்ந்தால் நாமே கடவுள். அந்தச் சத்தியம், பிரம்மம், உண்மை, அறிவு நமக்குள்ளிருக்கிறது.
- எனவே உனக்குள் இருக்கும் கடவுளை, பிரம்மத்தை வெளியே தேடி வாழ்க்கையை வீணாக்காமல் உனக்குள் தேடு அதன் மூலம் நீயே பிரம்மமாகலாம், கடவுளாகலாம். அத்தகைய பிரம்மமே சிவன், ஈசன். எனவே நீ ஈசனையடைய அறிவை வளர்த்தெடு, சிந்தனையை வளர்த்தெடு என்கிறார் கவிஞர் வெள்ளியங்காட்டான்.

துணைநின்றன

கவிஞர் வெள்ளியங்காட்டான் படைப்புகள் தொகுதி –2:63

பொறித் தமிழ்

கொடுமுடி சண்முகம்



நீண்ட நெடுங்காலமாகப் பனை ஓலை எழுதுபொருளாகப் பயன்பட்டு வந்தது. எழுத்தாணி கொண்டு ஓலையில் கீறினர். பண்டை இலக்கியங்கள் எல்லாமே ஓலையிலிருந்து பிரதி செய்த வகையில் கிடைத்தவைகளே ஆம். அவ்வப்போது பல ஒப்பந்தங்கள் கல்லிலும் செம்பிலும் வெட்டப்பட்டன. ஊர் மக்கள் படித்துப் பயன்பெறும் பொது இடங்களில் அவை இருந்தன.

கால மாற்றங்களால் இன்று பனை ஓலையின் பயன்பாடு அருகிவிட்டது. இளைய தலைமுறை எழுத்தாணியைக் கண்டதில்லை. காகிதம், பேனா, தட்டச்சுப்பொறி, அச்சுப்பொறி, மோனா டைப், லைனோ டைப், எலக்ட்ரோ டைப், டெலிபிரிண்டர், கம்ப்யூட்டர், பிராட்மா பிரஸ் முதலான தற்கால சாதனங்களில் சிலவற்றை உயர் பதவிகளில் உள்ளவர்கள் கூடக் கேட்டதில்லை. ஆனால் அவற்றின் விளைவுகள் எங்கும் பரவியுள்ளன. பொதுமக்கள் அன்றாடம் துய்க்கும் வகையில் இடம் பிடித்துள்ளன.

எல்லாப் பணிகளும் முடிந்தபிறகு எழுதப்பட்ட காகிதமாகக் கைகளில் விழுவதால், அதன் செயல்முறை பற்றி எண்ணிப்பார்க்கத் தோன்றவில்லை. சுட்ட இட்டலியைத் தட்டிலே காணுவது போன்ற நிலை இதுவாகும். இட்டலி வேகும்போது அடுக்களையில் அன்னை படும்பாட்டை அறிவார் யார்? சமையலறையில் வசதிகள் உள்ளனவா? புகை சரியாகப் போகின்றதா? நல்ல வெளிச்சம் உள்ளதா? காற்றோட்டம் உள்ளதா? ஏண்ணிப் பார்ப்போர் எத்தனைபேர்? இட்டலி சுவையாக உள்ளது, அதனால் அங்கு எல்லா வசதிகளும் இருக்கும் என்று எண்ணிக்கொள்வது பொருந்துமா?

கல்வி அறிவு பெருக, அச்சுத்தொழிலின் இன்றியமையாமை வெள்ளிடைமலை. அதிலுறும் இடர் களைந்து, செலவைக் குறைத்தால் பொருளாதார வளம்பெருகும். தமிழ் மொழியில் செப்பங்களுக்குப் பரிந்துரைக்கப்படும் யோசனைகளைத் தமிழ் வளர்க்கும் தொண்டாகக் கருதாமல், தமிழ்நாட்டின், தமிழர்களின் பொருளாதார மேம்பாட்டு முயற்சியாகக் கருதுதலே முறை.

வரிவடிவம்

தமிழ் நெடுங்கணக்கில் ஒருசில மாறுதல்களைச் செய்து கொண்டால் நாட்டு வளர்ச்சியில் ஒரு முடக்கம் உண்டாகும். தற்போதுள்ள 247 எழுத்துக்களைத் தட்டச்சில்

65 வடிவங்களாகவும், அச்சில் 120 வடிவங்களாகவும் சுருக்கிக்கொண்டுள்ளோம். அவற்றை மேலும் சுருக்க இயலுமா?

எப்படிச் சுருக்கலாம்?

1. பெரியார் புழங்கியபடி : லை, ளை, ணை, னா,ணா, றா (இதனால் ஏழு வடிவங்கள் மிச்சம். ஆகார, ஐகார உயிர் மெய் வரிசைகள் முழுக்கச் சீர்மை பெறுகின்றன.)
2. உகர, ஊகார உயிர்மெய்களுக்குப் பக்கக்குறி சேர்த்தல் (இதனால் 36 எழுத்துக்கள் மிச்சம். இரண்டு வரிசைகள் சீர்மை பெறுகின்றன.)
3. உயிர் நெடில்களுக்குக் கால் சேர்த்தல் : அா, இா, உா, எா, ஒா (இதனால் ஐந்து எழுத்துக்கள் மிச்சம்)

மேற்கண்ட மூன்று வகைச் செப்பங்களும் தட்டச்சிற்குப் போதுமானவை. அச்சு எந்திரங்களுக்கு மேலும் இரண்டு பரிந்துரைகள் உள்ளன. (1) இகர, ஈகாரக் கொக்கிகளை எழுத்தோடு ஒட்டாமல், சற்றே பிரித்துப் போடலாம். சுதேசமித்திரன் நாளோடு பல ஆண்டுகளாக இவ்வாறே அச்சிட்டு வந்தததை அறிவோம். (2) மெய்யெழுத்தின் தலைப்புள்ளியை எழுத்தின் நேர் மேலே வைக்காமல் சற்றே தள்ளி வைக்கலாம். வெப்ப அளவைக் குறிக்கும் டிகிரிக் குறி வைப்பதுபோல வைக்கலாம். இங்குக் குறிப்பிட்ட இரண்டு செப்பங்களும் எந்த முயற்சியும் இன்றித் தானாகவே கையாளலாம். மாறுதல் மக்களிடையே வெளிப்படையாகத் தெரியாது.

உகர, ஊகாரப் பக்கக் குறிகள்

முதலில் கூறிய மூன்று பரிந்துரைகளும் நமக்கு ஏற்கனவே பழக்கமானவை. உகர, ஊகாரப் பக்கக் குறிகளுக்கான வடிவங்களை மட்டும் நிர்ணயித்துக் கொண்டால் போதும். அறிஞர்களின் பரிந்துரைகளை ஆராய்ந்து அரசாங்கம் ஏற்றுக் கொள்ளலாம்.

பரிந்துரைகள்

1: ◌ு , ◌ூ

இவ்விரண்டு குறிகளும் ஜுரம், என்றவாறு தமிழ்நாட்டு நூல்களில் இடம் பெற்றவை (தமிழ் நூல் என்று சொல்லவில்லை).

2. ு, ூ

மேலே கூறிய குறிகளைப் படித நிலையிலிருந்து நட்ட நிலைக்கு மாற்றியுள்ளோம். கேரள அரசாங்கம் இந்தக் குறிகளை ஏற்றுக் கொண்டுள்ளது.

3.

கருத்துக் கணிப்பில் இதனையும் சேர்த்துக்கொண்டோம். சுமார் 2000 பேரிடம் கருத்துக் கணிப்பு நடத்தினோம். அவர்களுடைய கையெழுத்துடன் கருத்தறி தாள்

பெற்று வைத்துள்ளோம். அவர்களில் சுமார் 80 விழுக்காடு முதல் வகைக் குறியீடுகளையே தேர்ந்தெடுத்தனர். அதற்கான காரணம் கேட்டபோது “ஏற்கனவே அறிந்த குறிகள். ஜூன் ஜூலை என்று அடிக்கடி எழுதுகிறோம். முதல் வகுப்புத் தமிழ்ப்பாட நூலிலேயே இடம் பெற்றுள்ளன” என்றனர். எனினும் தமிழில் பிறமொழிச் சொற்களை எழுதுவதற்குப் பயன்படுகின்றதே என்ற களங்கம் அதற்குண்டு.

எழுத்துவாகு குறைவான இடம் ஆகியவை கருதி இரண்டாம் வகைக் குறியீடுகளையே இக்கட்டுரை ஆசிரியர் பரிந்துரைக்கின்றார்.

தமிழகப் புலவர் குழு

தமிழகப் புலவர் குழு எழுத்துச் சீர்மை பற்றி ஆராய்ந்தது. அதன் முன்னோடிக்குழு இரண்டு புதிய குறிகளை யாத்து அளித்தது. அவை : _, + எனினும் புலவர் குழுவின் பேரவைக் கூட்டத்தில் எழுத்துச் சீர்மை பற்றிய இறுதி முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை.

ஐ

ஐ என்ற எழுத்தை மாற்ற வேண்டுவதில்லை. அய் என்று எழுதுவதால் ஒரே ஒரு எழுத்துத்தான் குறைகின்றது. எனவே அதனை மாற்றாமல் உள்ளபடியே வைத்துக்கொள்ளலாம்.

இலக்கணம்

வடிவ மாற்றங்களால் இலக்கணம் எந்த வகையிலும் இடர்படவில்லை.

மாறுதல் காலம்

தமிழில் எல்லா எழுத்துக்களின் அடிப்படை வடிவங்களும் தற்போது உள்ளபடியே வைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. உகர ஊகார வரிசை மட்டுமே மாறுகின்றன. எனவே மாறுதல் எளிது. மிகச் சிறிய முயற்சியுடன் புதிய வடிவங்கள் பழக்கமாகிவிடும்.

மாறலாமா?

என்றுமுள்ள தென்தமிழ் எனப் புகழ்பெற்ற தமிழை எடுத்ததற்கெல்லாம் மாற்றலாமா? என்போர் உண்டு. கூர்தலறம் என்பது மாந்தர் இனத்திற்கு மட்டுமல்ல, எழுத்து வடிவங்களுக்கும் பொருந்தும். திருவள்ளுவரும் தொல்காப்பியரும் எழுதியது இன்றைய வடிவில் அல்ல. அக்காலத்தில் வெறும் கூட்டல் குறி போன்ற வடிவமே ‘க’ என்னும் எழுத்தைச் சுட்டியது. அதே எழுத்துத்தான் படிப்படியாக வளர்ந்து இன்றைய வடிவத்தை அடைந்துள்ளது. தமிழ் எழுத்துக்கள் உயிர்ப்பு உள்ள மக்களால் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அதனால் காலங்கள் தோறும் சிறிது சிறிதே வளர்ந்து இன்றைய நிலையை அடைந்துள்ளன. எனவே இன்றியமையாமைக் கருதி சிற்சில மாற்றங்களை ஏற்றுக்கொள்வதில் பிழையேனும் இல்லை.

முன்னோடிகள்

எழுத்து வடிவில் இதேபோன்று இடருற்ற கேரள அரசாங்கம் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு (1973 இல்) மலையாள மொழியின் வரிவடிவைச் செப்பம் செய்துகொண்டது. உகர, ஊகாரப் பக்கக் குறிகளுக்குப் புதிய பக்கக் குறியை ஏற்றுக்கொண்டது. கூட்டு எழுத்துக்களை ஒழித்தது.

செயலாக்கம்

புதிய வடிவங்களைத் தமிழ் மக்களின் நன்மைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் அறியமுகப்படுத்த விழைகின்றோம். எந்த மாற்றத்திற்கும் தமதுஎதிர்ப்பைக் காட்டுவதே மக்களின் குணம் ஆகும். மாறுதலை எளிதாகச் செய்யவேண்டும், முதல் ஒரு மாதம் செய்தித் தாள்களின் தலைப்பை மட்டும் புதிய எழுத்தில் போடலாம். பின்னர் உள் செய்திகளையும் மாற்றிவிடலாம்.

பழைய நூல்கள்

இதுவரை அச்சிட்ட நூல்களை என்ன செய்வது? மறுபதிப்புப் போடமுடியாதவை பயனற்றுப் போய்விடலாம் என்று கருதுவர் சிலர். அந்த அச்சம் தேவையில்லை. எழுத்தின் அடிப்படை வடிவங்களில் மாற்றம் ஏதுமில்லையாதலால், புதிய எழுத்தில் கற்றோர் பழைய நூல்களை எளிதில் வாசிக்க இயலும். புதிய எழுத்துக்களுடன் பழைய வடிவங்களைக் காட்டும் அட்டவணை ஒன்றை வைத்துக்கொண்டால் போதும், அதனை ஒற்றைத் தாளில் அச்சடித்து ஒவ்வொரு பழைய புத்தகத்திலும் ஒட்டிவிடலாம்.

சட்டம் தேவையா?

தமிழ் எழுத்துக்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்கிற சட்டம் இதுவரை ஏதுமில்லை. பரம்பரையாகப் பயன்படுத்துகின்ற மரபு உரிமை மட்டுமே உள்ளது. தந்தை பெரியார் தமக்குச் சரி எனப் பட்டதைச் செயல் வடிவில் காட்டி வந்தார். அவரைப் பின்பற்றிப் பல ஏடுகள் அவ்வடிவங்களைக் கையாண்டன. அண்மைக் காலத்தில் சென்னைப் பல்கலைக் கழக ஏடுகள் கூட சில பெரியார் எழுத்தில் வந்தன. அறிஞர்களின் நூல்கள் பலவும் இவ்வெழுத்தில் வந்துள்ளன. அண்மைக் காலத்தில் தினமலர் நாளேடு கூட ஒரு பக்கத்தைப் பெரியார் வகை எழுத்திற்கு ஒதுக்கியுள்ளது.

உகர, ஊகார ஒட்டுக்குறிகளுக்குப் பலர் பல பரிந்துரைகளைக் கூறக் கூடுமாதலால் அவற்றுள் சிறப்பான ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை அரசு மேற்கொள்வது அவசியமாகின்றது. அரசின் பரிந்துரையேயாயினும் அதற்குச் சட்டம் இயற்றிப் பாதுகாப்புத் தருவது நல்லது.

அரசிற்கு எத்தனையோ பணிகள்! அதனிடையே இந்த முயற்சியை மேற்கொள்வது இயலாமல் போகலாம். அல்லது அளவு கடந்த காலதாமதம் ஏற்படலாம். அப்போது

அரசின் சட்டத்தை எதிர்கொள்ளக் காத்திராமல், அறிஞர்கள் முடிவு செய்த வண்ணம் மக்களே மேற்கொள்ளலாம். தற்போதைய சட்டங்களின்படி அது பிழையல்ல.

ஆட்சி மொழி

தமிழ் நாட்டில் ஆட்சி மொழி எனச் சட்டம் இயற்றி ஆண்டுகள் பல ஓடிவிட்டன. அரசு அலுவலகங்களில் அதனை நிறைவேற்ற முடியவில்லை. போதிய தட்டச்சுப்பொறி இல்லையென்பதையே, அதற்கான காரணமாகக் காட்டுவர். புதிய வரிவடிவைக் கொண்ட ஒரே தட்டச்சுப் பொறியில் ஆங்கிலம் தமிழ் இரண்டையும் அமைத்துக் கொள்ளலாம். (படம்)

கொடுமுடிப் பலகை



தற்போதைய ஆங்கிலப் பொறிகளையும் மிகக் குறைந்த செலவிலேயே இருமொழிப் பொறிகளாக மாற்றிக்கொள்ள இயலும். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்றபடித் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் சிறப்பாக அமலாகும்.

மின் தட்டச்சு, அச்சுக் கோர்ப்பு

தற்போது தட்டச்சுப் பொறிகள் மின்சாரத்தால் இயங்குகின்றன. 65 வடிவங்கள் கொண்ட மின் தட்டச்சு அமைப்பதை விட 33 வடிவங்கள் கொண்ட மின் தட்டச்சின் விலை பாதியாகக் குறைந்துவிடும்.

மோனோடைப், லைனோடைப் போன்ற பொறிகளுக்கு அச்சுக் கோர்ப்பது, தட்டச்சுச் செய்வது போன்றவை மிக எளிதான செயலாகும். எழுத்தாளரே அச்சுக் கோர்ப்பதற்கான எளிய வழிமுறைகள் உண்டு. அச்சுக் கோர்ப்பது ஓர் ஊரிலும் அச்சடிப்பது ஓர் ஊரிலும் நடைபெறலாம். எழுத்து எண்ணிக்கை குறையக் குறைய அச்சுச் செலவு குறையும். புத்தகங்களின் விலை மலிவாகும்.

தற்போது சிறிய அச்சகங்களில் சிறு பணிகள் அச்சிடுவதற்கான எழுத்துக்கள் வாங்கும்போது ஆங்கில எழுத்துக்கள் ஒரு எடை வாங்கினால் போதும். ஆனால் தமிழ்

எழுத்துக்கள் இரண்டு எடை வாங்கியாக வேண்டும். எழுத்தெண்ணிக்கை குறையக் குறைய அச்சுப்பணி எளிதாகும்.

கம்ப்யூட்டர்

தற்போது பல்கலைக்கழகங்களும், தேர்வு வாரியங்களும் மாணவர்களின் மதிப்பெண்கள் பட்டியலை தட்டச்சுச் செய்து தருவதில்லை. கம்ப்யூட்டர் மூலமாகவே அச்சிட்டுத் தருகின்றன. தற்போது கம்ப்யூட்டர்களின் அளவு குறைந்த தட்டச்சுப் பொறி அளவிலான பொறிகள் தயாரிக்கும் நிலையில் இந்தியா முன்னேறி விட்டது. தமிழகத்திலேயே அந்த முயற்சிகளும் நடைபெறுகின்றன. சிறுசிறு கடைகளும் பள்ளிகளும் கம்ப்யூட்டர் பயன்படுத்தும் நாள் நெருங்கிவிட்டது. எனவே கம்ப்யூட்டரில் தமிழ் இடம் பெறும் வகையில் தமிழ் வடிவம் சுருங்குவது அவசரமும் அவசியமுமாகும். எழுத்தெண்ணிக்கை கூடக் கூட மின் வட்டங்களின் எண்ணிக்கை கூடிப் பொறியியல் பணி மிகுந்து அதன் விலை கூடிவிடும். 125 வடிவம் கொண்ட தமிழ் 33 வடிவங்களாகக் குறைந்தால் கம்ப்யூட்டரின் விலை நான்கில் ஒரு பங்காகக் குறைந்துவிடும்.

ஒரு சொற்பொழிவாளரின் பேச்சை அல்லது இசைக் கலைஞரின் பாட்டைத் தற்போதைய கம்ப்யூட்டர் மொழியில் கொடுத்துவிட்டால், பின்னர் பேச்சாளரோ, பாடகரோ இல்லாத போதும், புதிய பேச்சையோ, பாட்டையோ கேட்க இயலும். சான்றாக, தியாகராச பாகவதரின் பாடல்களை வரிவடிவில் எழுதி இசையுடன் கற்பித்துவிடலாம். பின்னர் தற்போது கவிஞர் கண்ணதாசன் புனையும் பாடல் ஒன்றை வரிவடிவில் செலுத்தி அதனைப் பாகவதர் குரலில் கேட்க இயலும். இன்னும் நூறாண்டுகளுக்குப் பின்னர் எழுதப்படும் சொற்பொழிவை, அக்காலத் தமிழர் கி.ஆ.பெ.விசுவநாதம் குரலில் கேட்டு மகிழமுடியும். இதேபோலத் திருவள்ளுவர் குரலையோ, இளங்கோவடிகளின் குரலையோ கேட்க முடிந்தால் எத்தனை இன்பமாக இருக்கும்! தற்போது ஆங்கில மொழியிலும், வேறுபல மொழிகளிலும் இது சாத்தியமாகிவிட்டது. தமிழில் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

மொழியா? பொறியா?

மொழிக்காகப் பொறிகளா, பொறிகளுக்காக மொழியா? நல்ல கேள்விதான். மொழியின் ஏவல் கேட்கத்தான் பொறிகளின் துணை தேடுகிறோம். ஒரோவழி பெருத்த நன்மை கருதி, மொழியின், வரிவடிவில் மிகச்சிறிய மாற்றங்களை ஏற்றுக் கொள்ளக்கூடாதா? ஓலையிலிருந்த எழுத்துக்களை அச்சு எந்திரங்களுக்கு ஏற்பச் சில மாறுதல்களை வீரமாமுனிவர் மேற்கொண்டார். தற்போது பழைய ஓலை நிலைக்கே மாறுகிறோம் அவ்வளவுதான்.

அறிவியல் வளர்ச்சி வேகம் அளவு கடந்த நிலையில் உள்ளது. அதோடு ஒத்துப்போக விரையவில்லையானால் என்றுமுள்ள தென்தமிழ் என்ற வாசகத்தைச் சற்றே மாற்றவேண்டி வந்து விடலாம். அட்லாண்டிக் பெருங்கடலைக் கட்டுமரத்தினாலும் கடக்கலாம், கன்கார்டே விமானத்திலும் கடக்கலாம். நாம் என்ன செய்யப்போகிறோம்?

புதிய வடிவங்கள்

உயிர்	:	6	அ இ உ எ ஐ ஒ
மெய்	:	18	க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன
உயிர்மெய்	:	8	ா, ி, ீ, ு, ூ, ெ, ே, ை
மெய்ப்புள்ளி	:	1	.

ஆய்த எழுத்து அறிவியல் வடிவு ஆகையால் (ஃ) என்பதில் வந்து விடுகின்றது.

முடிப்புரை

புதியன புகுதல் வழுவல. இலங்கையில் 1974 சனவரியில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் எழுத்துச் சீர்மை பற்றி மூன்று கட்டுரைகள் இடம அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மாநாடு புதுச்சேரித் தாகூர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கிலும் அதன் பின்னர் ஒவ்வொரு கருத்தரங்கிலும் இது பற்றிச் சிந்தித்து வருகின்றது. அதன் கட்டுரைத் தொகுப்பான ஆய்வுக்கோவையில் ஒரு கட்டுரை புதிய வடிவில் வெளிவந்து கொண்டிருந்தது. தமிழகப் புலவர் குழுவும் இதுபற்றி ஆராய்ந்தது. ஆனால் முடிவு ஏதும் செய்யவில்லை. எண்ணித் துணிதல் நல்லதுதான். துணிதல் எப்போது?

நன்றி! நன்றி!! நன்றி!!!

இக்கட்டுரை சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டு வந்த மொழியியல் சிறப்பிதழில் (தொகுதி - 2, எண் - 3,1979) வெளிவந்ததாகும். இவ்விதழின் பாதிப்பாசிரியர்களுள் ஒருவரான பேரா.செ.வை.சண்முகம் அவர்கள் இக்கட்டுரையை வெளியிட ஒப்புதல் அளித்தார்கள். அவர்களுக்கு இனம் இதழ் நன்றி நவில்கின்றது.

பெருங்கற்காலத் தமிழ்ச் சமூகமும் 'தமிழி' எழுத்துப் பொறிப்புகளும் (தொல்லியல் களஆய்வை முன்வைத்து)

முனைவர் க.பாலாஜி
தமிழ் - உதவிப்பேராசிரியர்
ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி
கோவைப்புதூர் - 641 042

பெருங்கற்காலம் என்பது கி.மு.1000 - கி.மு.300 வரையிலான காலக்கட்டம். இவ்விடைப்பட்டதான காலக்கட்டத்தில் உலகெங்கிலும் ஒரே விதமான பண்பாடு நிலவியதெனத் தொல்லியல் அறிஞர்கள் தரவுகளை எடுத்துக்காட்டி நிறுவியுள்ளனர். தகவல் தொடர்புகளற்ற காலக்கட்டத்தில் கண்டங்கள் தாண்டி இப்பண்பாடு ஓர்மையுடையதாய் அமைந்திருந்தது என்பது வரலாற்றின் வியப்புக் குறியீடு. இனக்குழுப்போர், ஆநிரைகாத்தல், எல்லைப்போர், விலங்குகளோடு சண்டையிடல் என ஏதோவொரு காரணம் கருதி மாண்டு போன ஒருவனுக்கு (வீரன்) அல்லது வயது முதிர்ந்து இயற்கை மரணம் கொண்ட ஓர் இனக்குழுத் தலைவனுக்கு (Tribal leader) அமைக்கப் பெற்ற ஈமச்சின்னங்களாகவே பெருங்கற்காலத் தரவுகள் நமக்குக் கிடைக்கப் பெறுகின்றன. ஒரு சில தரவுகள் மட்டுமே ஈமச்சின்னங்கள் அல்லாத தரவுகளாகக் கிடைக்கின்றன. பெருங்கற்களால் அமைக்கப் பெற்ற கற்பதுக்கை (cist), கற்குவை (cairn), பரல்உயர் பதுக்கை (cairn circle), கற்கிடை (dolmen), நெடுநிலைக்கல் (menhir), குடைக்கல் (umbrella stone), நடுகல் (Hero stone), முதுமக்கள் தாழிகள் (urns) முதலியனவற்றைப் பெருங்கற்கால ஈமச்சின்னங்களாகத் தொல்லியல் அறிஞர்கள் வகைப்படுத்தியுள்ளனர். இப்பெருங்கற்கால நீத்தோர் சின்னங்கள் அமைவிடங்களையொட்டி அமைந்த சில குடியிருப்புப் பகுதிகளும் கண்டறியப் பெற்றுள்ளன. அவற்றிலிருந்து அகழாய்வு செய்யப்பெற்றுக் கொணரப் பெற்ற புழங்கு பொருட்களும் பெருங்கற்காலத் தரவுகளாகக் கருதப்பெறுகின்றன. அப்பொருட்களில் எழுதப்பெற்றுள்ள எழுத்துப் பொறிப்புகள், கீறல் குறியீடுகள், முத்திரைக் குறியீடுகள் இவற்றைக் கொண்டே அச்சமூகத்தின் வரலாறும், தொன்மையும் கண்டறிந்து எழுதப் பெறுகின்றன. அதனூடாக அவ்வினக்குழுவினரின் இலக்கியப் பிரதிகளும் ஆய்விற்குட்படுத்தப் பெற்றுப் பண்பாட்டு அடையாளங்கள் மீட்டெடுக்கப் பெறுகின்றன. அத்தகைய பெருங்கற்காலத் தொல்லியல் தரவுகளையும் இலக்கியப் பிரதிகளில் அமைந்த தரவுகளையும் ஒப்பிட்டு நோக்கித் தமிழ்ச் சமூகப் பண்பாட்டின் தொன்மையினையும் உண்மை நிலைப்பாட்டினையும் ஆய்வு செய்யும் முகமாக இக்கட்டுரை அமைகிறது. இவ்வாய்விற்குக் கொடுமணல் தொல்லியல் களமும் அங்குக் களஆய்வு செய்யப் பெற்றுக் கிடைக்கப்பெற்ற தரவுகளும் முதன்மைச் சான்றுகளாக அமைகின்றன.

தமிழ்ப்பிராமி (தமிழி) எழுத்துகளின் காலத்தைக் கி.மு.2ஆம் நூற்றாண்டிற்கு உட்பட்டு வரையறை செய்த ஐராவதம் மகாதேவன் அவர்களுடைய கருத்துக்கணிப்பினை முற்றிலும் மறுத்துச் சரியான தொல்லியல் தரவுகளுடன் நிறுவியுள்ளார் கா.ராஜன். அசோகர் பிராமியிலிருந்தே தமிழ்ப்பிராமி தோற்றம் பெற்றது என்ற கருத்தாக்கத்தினைத் தனது

கொடுமணல் தொல்லியல் ஆய்வுக்களம் வழிக்கண்டறியப் பெற்ற தரவுகளின் வழி மறுத்துரைத்துள்ளார். இவரைத் தவிர்த்து கே.வி.இரமேஷ், கே.வி.இராமன், நடன.காசிநாதன், சு.இராசவேலு ஆகியோரும் தமது கருத்துக்கள் வழி ஐராவதம் மகாதேவன் கருத்தினை மறுத்துரைத்துள்ளனர். கா.ராஜன் அவர்களுடைய தொல்லியல் ஆய்வு முடிவுகளிலிருந்து இக்கட்டுரையைத் தொடங்கலாம். அவர் ஆய்வு முடிவுகள் வருமாறு:

> அசோகர் – பிராமியிலிருந்து தமிழ்ப் பிராமி தோன்றியது என்பதை ஆய்விற்கு எடுத்துக் கொள்பவர்கள் அசோகர் எங்கிருந்து அவற்றை எடுத்துக்கொண்டார் என்பதற்கான விளக்கத்தினைத் தரவில்லை. அசோகர் காலத்தில் நன்கு புழக்கத்திற்கு வந்துவிட்ட இவ்வரிவடிவம் அதற்கு முன்பாக இந்தியாவில் இருந்திருக்க வேண்டும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால் அதற்கான போதிய சான்றுகள் வட இந்தியாவில் கிடைக்கவில்லை. பிப்ரவா, மகஸ்தான் போன்ற இடங்களில் கிடைத்த சான்றுகள் அசோகர் காலத்திற்குச் சிறிது முற்பட்டவை எனக் கருதுகின்றனர். மேலும், வடஇந்தியாவில் அசோகர் கல்வெட்டுகள் நீங்கலாகப் பார்த்தால் அங்குக் கிடைக்கும் சான்றுகள் மிகமிகக் குறைவு. தமிழகத்தைத் தவிர்த்து இந்தியாவில் கிடைக்கும் அனைத்துக் கல்வெட்டுகளும் மன்னனின் ஆணையின் பேரில் உருவாக்கப்பட்டவை. அதாவது கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் பெரும்பாலும் இவை அரசின் ஆவணமாகத் திகழ்துள்ளன. சமூகத்தின் பிற படிநிலைகளில் வாழும் சாதரண மக்களின் பயன்பாட்டில் இவை எத்துணை தூரம் பரவியிருந்தன என்பதற்குப் போதிய சான்றுகள் வடஇந்தியாவில் இல்லை. இந்தியா முழுவதும் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கிடைத்த பிராமி எழுத்துப் பொறிப்புப் பெற்ற பானை ஓடுகளின் மொத்த எண்ணிக்கை தமிழகத்தில் கொடுமணலில் கிடைத்த எண்ணிக்கைக்கு ஈடாகாது. கொடுமணலில் மட்டும் இருநூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பிராமிப் பொறிப்புப் பெற்ற மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. இவை ஒரு சதவீதத்திற்கும் குறைவான அளவில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கிடைத்தவை. கொடுமணல் முழுவதையும் அகழ்ந்து பார்த்தால் மீதமுள்ள 99% எழுத்துப் பொறிப்புகள் வெளிப்படும். இவை அங்கு வாழ்ந்த மக்களின் கல்வியறிவை அறிவதுடன் சமூகத்தின் பல்வேறு கூறுகளை அறியப் பெரிதும் உதவும் என்பது திண்ணம். மேலும் இந்தியாவின் பிற பகுதிகளில் இவை பெரும்பாலும் கல்வெட்டுகளிலேயே காணப்படுகின்றன. அங்ஙனம் கல்வெட்டுகளில் மட்டுமல்லாது பரவலாகத் தமிழகத்தில் காலத்தால் அழியாத பிறபொருட்களான நாணயங்களிலும், ஆபரணங்களிலும், பானை ஓடுகளிலும் இவை பொறிக்கப்பட்டுள்ளன. பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளில் கூடப் பெரும்பான்மையானவை மன்னர்களால் உருவாக்கப்படவில்லை என்பதனை இங்கு நினைவில் கொள்ளவேண்டும். இதைத் தவிர எளிதில் அழிந்து போகக் கூடிய ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டிருக்க வேண்டும் (கா.ராஜன், பக்கம் 70-71).

கொடுமணல் தொல்லியல் களத்தில் தமிழ் இலக்கிய மாணவர்களின் உதவியோடு 10 நாட்கள் கள ஆய்வு செய்யப்பெற்றது. அக்கள ஆய்வில், கறுப்பு சிவப்பு மண்பாண்டங்கள் (உட்புறம் கறுப்பு), பளபளப்பான கறுப்பு சிவப்பு மண்பாண்டங்கள் சில்லுகள், கீறல் குறியீடு

இடப்பெற்றுச் சுடப்பெற்ற மண்பாண்டங்கள், தமிழி பிராமி (தமிழி) எழுத்துப் பொறிப்புகள் உள்ள பானை ஓடு ஒன்று, வட்டமாகச் செதுக்கப் பெற்ற குவார்ட்ஸ் படிகக்கற்கள், உருக்கிய நிலையில் உறைந்த இரும்புக் கட்டிகள், சுடுமண் நூல்தக்களிகள், மணிகள் வைத்து அறுக்கப்பயன்படும் கருங்கற்கள், வளையல் (தொடி) செய்யப்பயன்படும் சங்குகள், வட்ட வடிவில் வழுவழுப்பாக்கப் பெற்ற குவார்ட்ஸ் கல், இரும்பை உருக்கப் பயன் கொண்ட மண்குழாய், உருளை வடிவில் உள்ள பெரிய கூழாங்கல், சிறிய துளைகள் உள்ள பிறைவடிவச்சுட்ட செங்கல் ஆகிய பொருட்கள் இத்தொல்லியல் களத்தில் செய்யப் பெற்ற மேற்பரப்பாய்வில் கண்டறியப் பெற்றுள்ளன. இப்பொருட்கள் யாவும் நிலத்தில் இருந்து அகழ்ந்து எடுக்கப்பெறவில்லை. மாறாக, சாலைச் சீரமைப்புப் பணிக்காகத் தோண்டப் பெற்ற பள்ளங்களில் இருந்தும் வயல் சரிவுகளில் இருந்தும் சேகரிக்கப் பெற்றவையாகும். மேற்கூறிய பொருட்களில் உள்ளவற்றோடு இன்னும் சில பொருட்களைக் கா.ராஜன் தனது அகழ்வாய்வின் மூலம் முறைப்படி வெளிக்கொணர்ந்து ஆய்வு முடிபுகளைத் தொல்லியல் துறைக்கு வழங்கியுள்ளார்.

மேற்பரப்பாய்வில் கிடைக்கப்பெற்ற ‘தமிழ்ப்பிராமி’ எழுத்துப் பொறிப்புள்ள பானை ஓடு இங்குக் கவனத்திற்குரியது. பானையின் ஒரு பகுதி மட்டும் முழுமையாகக் கிடைத்துள்ளது. ஏனைய பகுதிகள் நன்கு சிதைவடைந்து விட்டன. அவற்றை ஒருங்கிணைத்துப் பார்க்க இயலவில்லை. பானை ஓடு பளப்பளப்பான நிலையில் அமைந்து, அதன் மீது கீறல் முறையில் எழுத்துக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. அவ்வெழுத்துக்களை எழுதக் கூர்மையான ஆணி போன்ற பொருள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். வழுவழுப்பான பொருள் மீது எழுதுவதென்பது கூரிய உலோகத்தால் மட்டுமே சாத்தியம். இப்பானையின் மீது இரு எழுத்துக்கள் எழுதப் பெற்றுள்ளன. அவற்றில் இரண்டாவது எழுத்து தமிழ்ப்பிராமி முறையில் அமைந்த ‘தி’ என்ற எழுத்து. முதலாவது எழுத்து தமிழ்ப்பிராமி உயிரெழுத்து மெய்யெழுத்து வரிசைகளில் இல்லாத எழுத்து வடிவமாகும். சிந்துவெளி எழுத்து வடிவமாக இருப்பதற்கு வாய்ப்பு உண்டு. சிந்துவெளி எழுத்து வடிவங்களில் இருந்து வளர்ச்சிபெற்ற எழுத்துக்களாகத் தமிழி (தமிழ்ப்பிராமி) வரிவடிவம் அமைந்துள்ளது என்ற கருதுகோளை ஏற்றுப் பல தொல்லியல் அறிஞர்கள் நிறுவியுள்ளனர். சிந்துவெளியில் இருந்து தமிழி வடிவமாக மாறிக்கொண்டிருந்த காலக்கட்டத்தில் எழுதப்பெற்ற ஒரு சான்று (தமிழி வரிவடிவம்) நமக்கு முன்பு கிடைத்துள்ளது. விழுப்புரம் மாவட்டம் மருங்கூரில் கண்டறியப்பெற்ற முதுமக்கள் தாழி ஒன்றில் கண்டறியப்பெற்றுள்ளது. அத்தாழியில் ‘அம்மூவன்’ எனத் தெளிவாகப் பொறிக்கப்பெற்றுள்ளது. அதில் அமைந்த முதல் இரு எழுத்துக்களான ‘அம்’ என்பது தென்பிராமியான தமிழி எழுத்துக்களாலும் அடுத்ததாக அமைந்த ‘மூவன்’ என்பது சிந்துவெளி எழுத்துக்களாலும் பொறிக்கப் பெற்றுள்ளன. இவ்விரண்டு சொற்களையும் சேர்த்து ‘அம்மூவன்’ எனப் படித்தறிதல் வேண்டும்.

‘சிந்துவெளி எழுத்திலிருந்து தென்பிராமி எனும் தமிழ் எழுத்து உருவாக்கப்பெற்ற பிறகு பழைய எழுத்து முறையை உடனே மாற்றிக் கொள்ள முடியாதவர்கள் இருவகை எழுத்துக்களையும் கலந்து எழுதிய கலப்பு எழுத்துமுறை (mixed type) எழுத்துச் சான்றுகள்

தமிழ்நாட்டில் கிடைத்துள்ளன என்பர் இரா.மதிவாணன். இக்கலப்பு எழுத்து முறையில் எழுதப் பெற்ற சொல்லாகவே கொடுமணல் களஆய்வில் கிடைத்த இவ்வெழுத்துப் பொறிப்பையும் கருதமுடியும். சிந்துவெளி எழுத்து எனக் கருதப்பெறும் இவ்வெழுத்தின் அடியில் கோட்டு வடிவிலான மீன் போன்ற வடிவமும் இணைக்கப் பெற்றுள்ளது குறிக்கத்தக்கது. அதற்குக் கீழே ஒரு நீளமான குறியீடும் அமைந்துள்ளது. அது மீனின் உடலில் அமைந்த முள் போன்று வரிவரியாகவும் நீண்டதாகவும் கீறப் பெற்றுள்ளது. கொடுமணல் தொல்லியல் தளம் நொய்யல் ஆற்றங்கரையில் அமைந்துள்ளதால் இக்குறியீட்டினை ஆற்றுப் படுகையைக் குறிக்கும் குறியீடு எனக் கொள்ளலாம். பானை ஓட்டின் இடது ஓரத்தில் இன்னும் சில குறியீடுகள் அமைந்துள்ளன. ஆனால் அக்குறியீட்டின் ஒரு பகுதி சிதிலமடைந்த பகுதியில் காணாமல் போய்விட்டது.

மேற்பரப்பாய்வில் கிடைத்த மற்றுமொரு பானை ஓடும் கவனத்திற்குரியது. இப்பானை ஓடு சுடப்படுவதற்கு முன்பு கூரிய உலோகத்தால் கீறப்பெற்றுப் பின்பு சுடப்பெற்றுள்ளது. இவ்வகையில் அமைந்த சான்றுகள் கிடைப்பது அரிது. இதனை ஓவிய வடிவில் அமைந்த குறியீடாகக் கருதலாம். இக்குறியீடு காண்பதற்கு மயிலின் தலையில் அமைந்த தூவி (கொண்டை) போன்று ஐந்து கோடுகளைக் கொண்டு அமைந்துள்ளது. இதனை எண்ணிக்கையைக் குறிக்கும் எண்குறியீடுகளாகவும் கருதலாம். இதுபோன்ற குறியீடுகள் கோட்டு வடிவில் அமைந்து கருத்துகளை உணர்த்தும் கருத்தெழுத்துகளாகவும் (ideography) கருதப்பெறுகின்றன. இத்தன்மை கொண்ட தரவுகள் 'அரப்பன்' எழுத்து முறையில் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இப்பானை ஓட்டின் சிதிலமடைந்த பகுதியில் மேடு போன்ற கீறல் குறியீட்டின் அடையாளம் காணப் பெறுகின்றது. அதனை ஒருமலை முகடு போலக் கருதலாம். அதன்மேல் ஐந்து கோடுகளும் கோடுகளின் முடிவில் சுழியமும் அமைந்துள்ளது. இதனை மற்றொரு கோணத்தில் படவெழுத்தாகவும் (pictography) கருதமுடியும். மேற்கூறிய தரவுகளைச் செவ்விலக்கியங்களில் அமைந்த தரவுகளோடு ஒப்பிட்டு நோக்கமுடியும். தொல்தமிழ் வரிவடிவங்களின் தன்மை குறித்தும் வடிவம் குறித்தும் தொல்காப்பியமும், சங்கஇலக்கியமும் சான்றுகள் பகர்கின்றன.

பெயரும் பீடும் எழுதிஅதர் தொறும் பீலிசூட்டிய (அகம்.67)

விழுத்தொடை மறவர் வில் இடவீழ்ந்தோர்

எழுத்துடை நடுகல் (அகம்.53)

எழுத்துடை நடுகல் (ஐங்.352)

அணிமயில் பீலிசூட்டி

பெயர் பொறித்து இனிநட்டனரே கல்லும் (புறம்.264)

கூர் உளிகுயின்ற கோடுமாய் எழுத்து (அகம்.343)

பெயர்பெயம் படரத்தோன்று குயில் எழுத்து (அகம்.297)

உட்பெறு புள்ளி உருவாகும்மே (தொல்.14)

இச்சான்றுகள் தொல்தமிழ் எழுத்துகளின் வரிவடிவம் அமைந்த நடுகற்கள் குறித்த செய்திகளைத் தருகின்றன. தொல்காப்பியர் குறிப்பிடும் மகரக்குறுக்கத்தின் வடிவம் குறித்த கருத்து முக்கியத்துவம் வாய்ந்தது. குறுகிய மகரமெய்க்கு உரிய வரிவடிவத்திற்குள்ளே புள்ளி

ஒன்று அமையும் எனத் தொல்காப்பியர் விதி வகுத்துள்ளார். இம்முறையில் புள்ளி அமைந்த எழுத்து ஒன்று ஆண்டிப்பட்டி புதையல் நாணயத்தில் கிடைத்துள்ளது. அகம்.343, 297 ஆகிய இரு பாடல்களிலும் எழுத்து அமைந்த தன்மையினை 'கோடுமாய் எழுத்து', 'குயில் எழுத்து' எனக் குறித்துள்ள பதிவு மிகமுக்கியமான பதிவுகளாகும். அவ்வாறே 'பெயரும் பீடும் எழுதி அதர் தொறும் பீலி சூட்டிய' (அகம்.67) என்ற பாடலில் அமைந்த 'பெயரும் எழுதி' என்ற சொற்கள் எழுத்து எழுதிய முறையைக் குறிக்கவில்லை என்றும் அது போரில் மாண்ட வீரனின் உருவம் வரையப் பெற்றமையைக் குறித்து அமைகிறது, என்றும் தொல்லியல் அறிஞர்கள் கருதுகின்றனர். அது எழுத்தாக அமையினும் அல்லது ஓவியமாக அமையினும் மிகமுக்கியமான தொல்லியல் தரவுகளை வெளிப்படுத்தும் இலக்கியத் தரவுகளாக அமைகின்றன. இவ்வகையில் நோக்கும் பொழுது கொடுமணல் கள ஆய்வில் கிடைத்த கீறல் ஓவியம் கொண்ட பானை ஓடு முக்கியத்துவம் பெறுகிறது. கா.ராஜன் 'தொல்லியல் நோக்கில் சங்ககாலம்' என்ற தனது நூலில் 'குறியீடுகள்' என்ற தலைப்பில் குறியீடுகளின் அட்டவணைகளைத் தொகுத்தளித்துள்ளார். அதில் அட்டவணை – 4, அட்டவணை - 8 ஆகியனவற்றில் குறித்துள்ள உடுக்கைக் குறியீடு போன்ற குறியீட்டின் தலைகீழ் வடிவமாக அமைந்த குறியீடே இக்கட்டுரையாசிரியரின் களஆய்வில் கிடைத்துள்ளமை குறிக்கத்தக்கது. அவரது அட்டவணையில் தரப்பெற்றுள்ள குறியீடுகளில் இவ் 'உடுக்கை' போன்ற குறியீடே அதிக எண்ணிக்கையில் காணப்பெறுகின்றது. இக்குறியீட்டின் அடிப்பகுதியில் கோட்டு உருவத்தில் அமைந்த மீன் வடிவம் ஒரு கருத்தினை உணர்த்துவதற்காகக் கீறப் பெற்றிருக்கலாம். மேலும் ஆற்றுப் படுகையினைக் குறிக்கும் நீளமான குறியீட்டையும் கோட்டுருவ மீன் குறியீட்டையும் பொருண்மை நோக்கில் தொடர்புபடுத்திப் பார்க்கமுடியும். உலகின் தொடக்ககால நாகரிகங்கள் ஆற்றங்கரையோர நாகரிகமாக அமைந்துள்ளமை ஆய்வுலகம் அறிந்த ஒன்று. கொடுமணலில் அமைந்துள்ள ஆறு நொய்யல் ஆற்றின் கிளையாறாகும். அதன் ஆற்றுப்படுகை நாகரிகமாகக் கொடுமணல் நாகரிகத்தைக் கொள்ள வேண்டும். மீன் என்பதும் ஆற்றுப்படுகை என்பதும் மனிதனின் அடிப்படை வேளாண் மற்றும் உணவு உற்பத்தியின் குறியீடாகக் கொள்ள முடியும். இக்கோட்டுருவ மீன் குறியீடுகளே சங்ககாலப் பாண்டியர் நாணயங்களில் முதன்மைக் குறியீடாக அமைந்துள்ளமையும் ஒப்புநோக்கத்தக்கதாகும்.

கொடுமணல் என்ற தொல்லியல் களத்தில் ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்த அடையாளங்களுக்குத் தேவையான அனைத்துத் தரவுகளும் ஒருசேரக் கிடைப்பது தொல்லியல் அறிஞர்களுக்குப் பெரும் வியப்பை ஏற்படுத்துவதாக அமைகிறது. கற்பதுக்கை (கல்வட்டம்), நெடுநிலைக்கல், நடுகல், பிற்கால வட்டெழுத்து நடுகல், முதுமக்கள் தாழிகள், கறுப்பு சிவப்புப் பளபளப்பான பானை ஓடுகள், முத்திரைகள், குறியீடுகள், தமிழ்ப்பிராமி (தமிழி) எழுத்துப் பொறிப்புகள் இவை மட்டுமல்லாது தொழில்துறை வளர்ச்சி பெற்ற நகரமாகவும் விளங்கியுள்ளமையினைக் கா.ராஜன் தனது அகழாய்வின் வழி வெளிக்கொணர்ந்து உள்ளார். அரிய கல் மணிகள் பட்டை தீட்டும் தொழில்நுட்பம், இரும்பு உருக்கி எடுக்கும் தொழில்நுட்பம், பருத்தியாடைகள் நெசவு செய்யும் நுட்பம் என அத்தனை நாகரிக வளர்ச்சியும் இருந்தமைக்கான தரவுகள் ஒருசேரக் கிடைத்திருப்பது உலகின்

பார்வையை நம் பக்கம் திருப்பியுள்ளது. இவ்விடத்தில் ஏறத்தாழ 4000 ஆண்டுகள் மனித இனக்குழுக்கள் வாழ்ந்தமைக்கான தரவுகள் வெளிப்படையாகக் கிடைக்கின்றன. கொடுமணல் என்ற இவ்விடம் பற்றிய குறிப்பு சங்கஇலக்கியத்தில் அமைந்துள்ளது. கொடுமணல் எனத் தற்பொழுது வழங்கப் பெறும் இந்நிலம் சங்க இலக்கியத்தில் 'கொடுமணம்' என வழங்கப் பெறுகின்றது.

'கொடுமணம் பட்ட வினைமான் அருங்கலம்' (பதிற்.74)

'கொடுமணம் பட்ட … நன்கலம்' (பதிற்.67)

கொடுமணம் என்ற இடத்தில் செய்யப்பெற்ற நல்ல பொருட்கள் என்பது அதன் பொருளாகும். பெரும்பாலும் விலையுயர்ந்த கலைநுணுக்கம் செய்யப்பெற்ற பொருட்களாகவே அமைந்திருக்கும் என்பதைக் குறிக்கவே 'வினைமான்நன்கலம்' 'அருங்கலம்' என்ற சொல்லாட்சிகள் கையாளப் பெற்றுள்ளன. இலக்கியப் பிரதிகள் குறிக்கும் தரவுகள் தொல்லியல் அகழாய்வின்வழிக் கண்டறியப் பெறுதல் என்பது அச்சமூகத்தினரின் உண்மையான வாழ்வியலை அப்பிரதிகள் தொடர்ந்து கடத்தி வந்துள்ளமையினை உணர்த்துகிறது. ஆக சங்க இலக்கியப் பிரதிகளின் உண்மைத் தன்மையும் இதன்வழிப் புலப்படுகின்றது.

கொடுமணலில் கண்டறியப் பெற்ற பொருட்களில் பெரும்பாலானவை புழங்கு பொருட்களாகும். புழங்கு பொருட்களின் மீதே பெரும்பாலான தமிழ்ப்பிராமி எழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன. சாதாரண அடித்தட்டு மக்களும் இத்தொன்மையான எழுத்து முறையைப் பயன்படுத்தி வந்துள்ளனர். வீடுகளில் தாங்கள் புழங்கும் பொருட்களில் பெயர்களை எழுதிவைக்கும் வழக்கம் இன்றும் தொன்று தொட்டு நம்மிடையே இருந்து வரும் பண்பாட்டு எச்சங்களில் ஒன்றாகும். குறிப்பாக உணவு உண்ணும் வட்டில்களின் (தட்டு) வாய்ப் பகுதியில் (விளம்பு) பெயர்களை வெட்டிவைக்கும் மரபானது பெருங்கற்காலத்திலிருந்தே தொடர்ந்து வருகின்றது எனலாம். ஏனெனில் தமிழ்ப்பிராமி எழுத்துப் பொறிப்புகளில் பல மண்வட்டில்களின் வாய்ப்பகுதியிலும், கழுத்துப் பகுதியிலும் காணப்பெறுவது குறிக்கத்தக்கது. பெருங்கற்காலத் தமிழ்ச் சமூகம் நன்கு கல்வி கற்ற சமூகமாகவும் இருந்துள்ளமை இதன்வழிப் புலப்படுகின்றது.

கொடுமணலில் மேற்கொள்ளப்பெற்ற மேற்பரப்பாய்வில் மட்டும் இவ்வளவு அரிய தொல்பொருட்கள் கிடைக்கப் பெறுகின்றன. கா.ராஜன் குறிப்பிடுவது போல் இத்தொல்லியல் களத்தின் ஒரு சதவிகிதம் மட்டுமே ஆய்விற்குட்படுத்தப் பெற்றுள்ளது. அதில் மட்டும் 200-ற்கும் மேற்பட்ட தமிழ்ப்பிராமி எழுத்துப் பொறிப்புகள் கிடைக்கப் பெறுகின்றன. அது இந்திய அளவில் கிடைக்கப்பெற்ற எழுத்துப் பொறிப்புகளில் முக்கால் பங்கு கொண்டுள்ளது. பெருங்கற்காலத் தமிழ்ச் சமூகம் என்பது விலையுயர்ந்த பொருட்களையும், சாதனங்களையும் பயன்படுத்தும் சமூகமாக மட்டுமன்றி அவற்றை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் வணிகப் பண்பாடு கொண்ட நாகரிக சமூகமாகவும் விளங்கியுள்ளது. இம்மக்கள் பயன்படுத்தும் மொழியின் வரிவடிவம் தொன்மையான சிந்துவெளி வரிவடிவத்திலிருந்து வளர்ச்சி பெற்ற தொல்வடிவம் என்பதும் இத்தொல்லியல் தரவுகள் மூலம் புலப்படுகிறது.

துணை நின்றவை

1. இராசமாணிக்கனார் மா., 2008 (மு.ப.), கல்வெட்டுகளும் தமிழ்ச்சமூக வரலாறும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
2. இராசவேலு.சு., 2008 (மு.ப.), தொல்லியல் சுடர்கள், சேகர் பதிப்பகம், சென்னை.
3. இராசவேலு.சு., 2010, "அரிக்கமேடு அகழ்வாய்வு", உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு (மலர்), தமிழ்நாடு அரசு, கோவை.
4. இளங்கோ சி., "பெருங்கற்காலத் தமிழ்ச்சமூகம் தொல்லியல் தரவுகளை முன்வைத்து", புதிய பனுவல் (தொகுதி : 03), சென்னை.
5. குருமூர்த்தி, செ., 2010, "பழம்பானைக் குறியீடுகளும் தமிழர் பண்பாடும்". உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, தமிழ்நாடு அரசு, கோவை.
6. மதிவாணன் இரா., "சிந்துவெளித் தமிழ் எழுத்துக்கள்", உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, தமிழ்நாடு அரசு, கோவை.
7. ராஜன் கா., 2010 (மு.ப.), தொல்லியல் நோக்கில் சங்ககாலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
8. விசய வேணுகோபால் கோ., "தமிழகத்தின் எழுத்து வழக்கம் அசோகன் காலத்திற்கும் முந்தையது", மணற்கேணி, சென்னை.
9. ஸ்ரீதர் தி., (ப.ஆ.), தமிழ்ப்பிராமி கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை, சென்னை.

தொல்லியல் படங்கள்

படம் – 1 : தி எழுத்து உள்ள பானை ஓடு

படம் - 2 : மயிலின் தலையில் அமைந்த தூவி (கொண்டை) போன்ற குறியீடு

படம் - 3 : ஆற்றுப்படுகையைக் குறிக்கும் குறியீடு

படம் - 4 : கொடுமணல் களஆய்வு குழு

படம் – 5 : தட்டில் பெயர் எழுதும் மரபு

Nature resister: English & Tamil Poets

R.Nithya
Assistant Professor
Department of English
St. Paul's College of Arts and Science
Coimbatore

In the world, all are changeable, apart from natural things. It provides us variety of beautiful flowers, attractive birds, animals, Air Mountains, valleys, hills and many more things.

When we throw lights on literature, nature plays a prominent role. Remember that, great poet; novelist had registered many precious works to the world, regarding nature. The article aims to know the difference between the Tamil and English poet, how portrayed nature in their works.

While having a glance at English literature, the renowned poet, John Keats, begins his famous poem: Endymion with the line. A thing of beauty is a joy forever.

A thing of beauty touches the human heart as nothing else does. It elevates the human soul man feels some inexpressible inner joy. The experience is unforgettable. Here, the poet makes a link between the beauty and the human heart. The poet generally talks about the beauty, so it may be flowers, birds, plants, blue sky, running rivers etc.

Further, Tamil literature can also be manifesting the roll of nature in their writings. In line with feelings, ideas environment society, nature may be, attain different position in their writings. Here point out that the idea's of poets is different, even the natural things are same,

A well-known Tamil poet. M. Metha (மு.மேத்தா) stretched on the status of flower in his output KaNNIr pUkkaL (கண்ணீர் பூக்கள்).

பூக்களிலே நானுமொரு

பூவாய்த்தான் பிறப்பெடுத்தேன்

பூவாகப் பிறந்தாலும்

பொன் விரல்கள் தீண்டலையே!

பொன் விரல்கள் தீண்டலையே– ! நான்

பூமாலை யாகலையே!

He differently thought the condition of flower araLippU (அரளிப்பூ). Generally speaking, there was a super seditious beliefs behind the flower. Lomen usually not to keep this flower on their hair. Here the sickly not give importance to this, like Jasmine, Rose, etc. However, M.Metha assured himself as a flower and to notify the state of annoying flower.

Broadly, Metha a attains a specific feature in the poetry world. He raised a voice for the state of araLi and injeets a soul to it through his beautiful lines.

Another famous English poet called William words worth. He mainly affairs a name and fame nature poet in English literary world. Here word worth also written the poem the daffodils, regarding flower. Throughout the poem, there is no such metaphor, simile. The poet purely dealt with natural things, clouds, vales, hills, lake trees, breeze, stars, milk way, waves. How! He stretched, out his poem The Daffodils with natural things.

For oft, when on my couch I lie

In vacant or in pensive mood,

They flash upon that inward eye

Which is the bliss of solitude

And then my heart with pleasure fills

And dances with the daffodils

From this, the poet explores that his heart was filled with pleasure and it seemed to dance with the daffodils. Thus he experienced that joy of solitude. The sight of daffodils was thus a source of great delight to the poet and even in his hours of solitude, it gave him immense pleasure. The poet belived in the powers of nature to give consolation to man.

Here, observed that, Nature teaches man as the lesson of peace, innocence, purity, love, harmony and simplicity. Wordsworth believes that nature is the greatest store0 house of wisdom, apart from being a source of external happiness. It symbolizes as

One impulse from the vernal wood

May teach you more of man,

Of moral evil and of good

Than all the stages can

Another towering personality (ஆளுமை) play a key role in Tamil literature. He also came out of the feelings of budding flower. Some of the flowers have a honey by nature. So the flies are attractive towards the flower for talking the honey. By the time, how the flower suffered can be observed by the following line.

என்

விலா எலும்புவரை

வண்டுகள் வந்து

கடப்பாரை இரக்கிச் செல்லும்.

வருட வரும்

வண்ணத்துப் பூச்சியும்

மகரந்தம்

திருடித் திரும்பும்

From this line, we can noticed the obstacle of flower. What a pity is that? It also has feelings, emotion and compassion, passion sympathy like human beings.

எதுவும் என்னால்

நிர்ணயிக்கப் படாத வாழ்க்கை

எனக்கெதுக்கு

ஓரமாய்

நீ அமர்ந்து

கவிதை எழுதிப் போகவா?

As a result, it has been totally upset for pondering over its life. There is nothing in its hand. All are fate. Thus, everyone has its own fate. No one can change it and interrupt it. It has to console itself for……

References

Metha M., 2003, Kanner Pookal, thirumagal nilayam, Chennai.

Xacier A.G.(Edit.), 1998, An Anthology of Popular Essays and Poems (for young students), Macmillan Publishers India Limited, Chennai.

http://www.vinavu.com

http://xavi.wordpress.com/2008/08/07/flower-2/

வேந்தர்களின் தலைவிதியை வரையறுத்தவன் மலையமான் திருமுடிக்காரி

முனைவர் ந.இராஜேந்திரன்
தமிழ் - உதவிப்பேராசிரியர்
மகாராஜா இருபாலர் கலை அறிவியல் கல்லூரி
பெருந்துறை - 638 052.

முதுகுடிமன்னர்களை விடச் சற்று மேலான நிலையில் இயற்கை வளம் சார்ந்த மலைப்பகுதிளை ஆட்சியெல்லையாகக் கொண்டு அரசாண்டவர்கள்தான் குறுநில மன்னர்கள். இக்குறுநில மன்னர்களுள் குறிப்பிடத்தகுந்தவன் கடையெழுவள்ளல்களில் ஒருவனான மலையமான் திருமுடிக்காரி. இவன் வேந்தர்களுக்கிடையே நிகழும் போரில் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கும் பேராற்றல் வாய்ந்தவனாக விளங்கினான் என்பதை, சங்க இலக்கியப் பதிவுகளின்வழி அடையாளப்படுத்தும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

மலையமான் திருமுடிக்காரி

தென்னார்க்காடு மாவட்டத் திருக்கோவலூர்க்கு மேற்கே பெண்ணையாற்றின் தென்கரைப் பகுதியும் தென்பகுதியும் பண்டை நாளில் மலாடு என்ற பெயரில் வழங்கப்பெற்று வந்தது. அதற்குக் கோவலூரே தலைநகர். அக்கோவலூரிலிருந்து ஆட்சி புரிந்தவனே மலையமான் திருமுடிக்காரி.

> இம்மலையமான் என்ற சொல் சேர அரசரைக்குறிக்க அமைந்தது. மலைநாடுடைமை பற்றி அவர்களுக்கு வழங்கிய அப்பெயர் காலப்போக்கில் சிறு, சிறு மலைகளையுடைய நாட்டுப்பகுதியை ஆண்ட குறுநில மன்னர்களுக்கு வழங்கலாயிற்று

என்பார் இரா. கிருஷ்ணமூர்த்தி (2011-1).

மலையமான் குறித்த சங்க இலக்கியப் பதிவுகள்

தொல்தமிழர்களின் வாழ்வியல் கருவூலமாகக் கருதப்பெறும் சங்க இலக்கியத்தில் குறுநில மன்னனான மலையமான் திருமுடிக்காரி குறித்து 18 பதிவுகள் ஆங்காங்கே காணக்கிடைக்கின்றன. அவை பின்வருமாறு:

மலையமான் திருமுடிக்காரி குறித்த பதிவுகள் - 18	
நற்றிணை - 5	77:1 - மலையமா, 100:9 - மலையன், 170:6-7 - மலையனது, 291:7-9 - முள்ளூர் மன்னன், 320:5-6 - காரி
குறுந்தொகை - 2	198:5-6- மலையன், 312:1-2- மலையர்
அகநானூறு -2	35:14-16- காரி, 209:12-16 காரி,
புறநானூறு - 8	121:3-4 மாவன் தோன்றல், 122:1-2 காரி, 123:2-3

	மலையன்,124:4-5 - மலையற், 125:12-15 மலையன், 126:7-8 - முள்ளூர் பொருந, 158:5-6 - காரி, 174:13 -20 - முள்ளூர்
சிறுபாணாற்றுப்படை -1	110 -111: காரி

மேற்குறிப்பிட்ட மலையமான் பற்றிய 18 பதிவுகளையும் இருபெரும் பிரிவாகப் பிரித்து ஆராயப்பெற்றுள்ளது.

I. புறநா.174:12-13இல் பதிவு செய்யப்பெற்றுள்ள 'நும்முன்' தந்தையா? இளவலா? என ஆராய்தல்.

II. மலையமான் வேந்தர்களுக்கு அடங்கிய குறுநில மன்னனா? அல்லது வேந்தர்களின் தலையெழுத்தை வரையறுத்த வல்லவனா? என ஆராய்தல்.

I. 'நும்முன்' தந்தையா? இளவலா?

எள்அறு சிறப்பின் முள்ளூர் மீமிசை,
……… ……… ……… ………
சுரும்பார் கண்ணி, பெரும்பெயர் நும்முன்
ஈண்டுச்செய் நல்வினை ஆண்டுச்சென்று உணீஇயர்,
உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன் ஆகலின் (புறநா.174:13-20)

என்ற அடிகளில் உள்ளூர் நும்முன் எனும் சொல்லிற்கு இரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இளவல் என்று குறிப்பிடுவதே பொருத்தமாக அமையும். தந்தையைக் குறிக்க 'நுந்தை'யே வந்திருக்க வேண்டும் (2011-6) என விளக்கம் அளிக்கிறார். ஆனால் உரையாசிரியர்கள் அனைவரும் தந்தை என்றே விளக்கம் தருகின்றனர். அவை பின்வருமாறு:

வரைமுழஞ்சில் வாழும் புலியையெழுதப்பட்ட லாஞ்சினையையுடைய கோட்டையையும் விளங்குதலையுடைய அணிகலத்தினையையும் வண்டார்க்கப் பட்ட கண்ணியையும் பெரிய புகழினையுமுடைய நுன்முன்னோனாகிய தந்தை

என விளக்கம் தருகின்றது உ.வே.சா. பதிப்பித்த பழையவுரை (1956.325).

வரைமுழைஞ்சில் வாழும் புலியை எழுதப்பட்ட லாஞ்சினையை உடைய அணிகலத்தினையையும் வண்டார்க்கப்பட்ட கண்ணியையும் பெரிய புகழினையுமுடைய நுன்முன்னோனாகிய தந்தை

என்கிறார் ஔவை.சு. துரைசாமிப்பிள்ளை (2002.377-378).

மலைக்குகையில் வாழும் புலியைப்பொறித்த லாஞ்சனையையுடைய (அடையாளமுத்திரை) கோட்டையையும் சுடர்விடுகின்ற அணிகலத்தினையும்

> வண்டுமொய்க்கும் மாலையினையும் பெரும் புகழினையும் உடையவன் நுன்முன்னோன் ஆகிய தந்தை

என உரைதருகின்றார் கு.வெ.பாலசுப்பிரமணியன் (2004.421).

> மலைக்குகையிலே வாழும் புலியுருவம் எழுதப்பட்ட பொறியமைந்த கோட்டையையும் ஒளிவிளங்கும் அணிகலன்களையும் வண்டுகள் மொய்த்து ஒலிக்கும் முடிமாலையையும் பெரும் புகழையுமுடைய நுன்னோனாகிய தந்தை

என விளக்கம் தருகின்றார் வ.குருநாதன் (2003.320).

> புலிலாஞ்சினைப் பொறித்த கோட்டையையும் ஒளிவிடும் அணிகலன்களையும் வண்டுகள் மொய்க்கும் மாலையையும் உடைய நின்முன்னோனாகிய தந்தை

என்கின்றார் இரா.இளங்குமரன் (2003.303).

மேற்சுட்டிய சான்றுகளைப் பார்க்கும்போது 'நும்முன்' என்னும் சொல்லிற்கு அனைத்து உரையாசிரியர்களுமே 'தந்தை' என்றே பொருள் கொள்கின்றனர். இக்கருத்துக்கு வலிமை சேர்க்கும் விதமாக பதிற்றுப்பத்தில் ஒரு சான்று கிட்டியுள்ளது.

> முன்திணை முதல்வர் போல, நின்றுநீ
> கெடாஅ நல்இசை நிலைஇத்
> தவாஅ லியரோஇவ் உலகமோடு உடனே (பதிற்.14:20-22)

என்ற இவ்வடிகள், உனது குடியில் தோன்றிய முன்னோர்கள், பொன் அணிகளையுடைய ஆணைச் சக்கரத்தால், கடல்சூழ்ந்த இவ்வுலகில், நாவலம் பொழில் முழுவதையும் நிலைத்த புகழோடு ஆண்டு வந்தனர். அவர்களைப்போல நீயும் ஒழுகி, அழியாத நல்ல புகழை நிலைபெறச் செய்து, கேடில்லாமல் உலகத்தோடு வாழ்வாயாக என்று இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் வாழ்த்துகிறார். இங்கு, இமையவரம்பனின் முன்னோன் என்பது அவனுக்கு முன்னோனான தந்தை உதியஞ்சேரலாதனையே குறிக்கிறது. இதே போல் புறநானூற்றில் பதிவு செய்யப்பெற்றுள்ள நும்முன் எனும் சொல் மலையமானின் தந்தையையே குறிக்கும் என்பது இக்கட்டுரையின் முடிபாக அமைகிறது.

II. மலையமான் வேந்தர்களுக்கு அடங்கிய குறுநில மன்னனா? அல்லது வேந்தர்களின் தலையெழுத்தை வரையறுத்த வல்லவனா?

நற்றிணை

நற்றிணையில் மலையமான் திருமுடிக்காரி குறித்துக் கபிலரால் மூன்று பதிவும் பரணரால் ஒரு பதிவும் புலவர் பெயர் இல்லா ஒரு பதிவும் இடம்பெற்றுள்ளன.

- 77:1 யானைமீது ஏறிச்செல்பவன் மலையமான்.
- 100:9 ஊரின் எல்லையில் பல ஆநிரைகளை விற்போரை வென்று செலுத்திக்கொண்டு வருகின்றவனும் இரவலர்களுக்குத் தேரைப் பரிசாகக் கொடுக்கும் வள்ளல் தன்மை உடையவனுமாகிய மலையமான்.

- 170:6-7 முள்ளூர்ப் போர்க்களத்தில் பலருடன் போருக்குச் சென்று தன் ஒப்பற்ற வாளை எடுத்த மலையனது ஆற்றலுக்கு அஞ்சி ஆரியப்படை ஓடியது.
- 291:7-9 இரவுப் பொழுதில் குதிரை மீது ஏறிச் சென்று பசுக்கூட்டங்களைக் கொணர்ந்து வரக்கூடியவன் முள்ளூர் மன்னனாகிய மலையமான் திருமுடிக்காரி. இவன்முன் எவராலும் போர்க்களத்தில் எதிர்த்து நிற்க இயலாது.
- 320:5-6 கொல்லிமலைக்குத் தலைவனாகிய வல்வில் ஓரியைக் கொன்றவன் மலையமான் திருமுடிக்காரி.

மேற்சுட்டிய ஐந்து பதிவுகளில் நான்கு பதிவுகள் மலையமானின் வீரம் குறித்துப் பேசுகின்றன.

குறுந்தொகை

குறுந்தொகையில் கபிலர் மலையமான் பற்றி இரு பதிவுகளைப் பதிவு செய்துள்ளார்.

- 198:5-6 மலையமான் திருமுடிக்காரி என்ற வள்ளலின் முள்ளூர்க் காட்டில் சந்தனம் மணக்கும்.
- 312:1-2 பகைவர் போர் செய்யுமிடத்து ஒருவருக்கு வலிமையான துணையாகச் செல்லக் கூடியவன் மலையமான் திருமுடிக்காரி.

மேற்சுட்டிய இரண்டு பதிவுகளில் ஒரு பதிவு மலையமானின் வீரத்தினைப் பறை சாட்டுகின்றது.

அகநானூறு

அகநானூற்றில் மலையமான் பற்றி அம்மூவனார் ஒரு பாடலும் கல்லாடனார் ஒரு பாடலும் பாடியுள்ளனர்.

- ✓ 35:14-16 திருக்கோவலூரின் அரசன் மலையமான் திருமுடிக்காரி.
- ✓ 209:12-16 முள்ளூர் மன்னனும் சிவந்த வேல் ஏந்தியவனும் வீரவளை அணிந்தவனும் ஆகிய மலையமான் திருமுடிக்காரி வல்லாண்மை கொண்ட மாயப் புகழையுடைய ஓரியைக் கொன்று சேர மன்னனுக்குக் கொல்லி மலையை மீட்டுக்கொடுத்தான்.

மேற்சுட்டிய இரு பதிவுகளும் மலையமானின் வீரச் சிறப்பினை எடுத்துரைப்பதாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

புறநானூறு

புறநானூற்றில் மலையமான் பற்றிக் கபிலர் நான்கு பதிவுகளையும், மாறோக்கத்து நப்பசலையார் இரண்டு பதிவுகளையும், பெருஞ்சாத்தனார் ஒரு பதிவினையும், பெருஞ்சித்திரனார் ஒரு பதிவினையும் தந்துள்ளனர். அப்பதிவுகள் வருமாறு:

- ❖ 121:3-4 மிகுதியான வளத்தை உடைய காரியே நீ புலவர்களின் தகுதியறிந்து போற்றுவாய்.

- ❖ 122:1-2 வீரக்கழல் அணிந்த காரியை வெற்றிமிக்க படையையும் உடைய மூவேந்தர்களுள் ஒருவன் எனக்குப் படைத்துணை ஆவாயாக எனக் கேட்டுள்ளான்.
- ❖ 123:2-3 குறையாத புகழுடைய மலையமான் பரிசாக பல தேர்களை வழங்கியவன்.
- ❖ 124:4-5 மலையமானைப் பாடிச்செல்வோர் நாள் அல்லாத நாளில் சென்றாலும் சகுனப் பறவைகள் தடுத்தாலும் பொருள் பெறுவோர் பரிசு பெறாமல் திரும்பமாட்டார்.
- ❖ 125:14-15 மலையமான் உதவிக்கு வந்ததால் வெற்றி பெற்றோர் உன்னால் வெற்றி பெற்றோம் என்றும் தோல்வி அடைந்தவர்கள் உன்னால் தோல்வி அடைந்தோம் என்றும் இருதிறத்தாரும் பேசும் அளவிற்கு வலிமை பொருந்தியவன் மலையமான்.
- ❖ 126:7-8 புலவர்களுக்கெல்லாம் தலைமைப் புலவனாக விளங்கும் கபிலரார் மலையமானின் கொடைப்பண்பையும் வீரத் தன்மையையும் புகழ்ந்து பாடியுள்ளார் என மாறோக்கத்து நப்பசலையார் பதிவு செய்துள்ளார்.
- ❖ 158:5-6 காரி என்னும் பெயருடையக் குதிரையைச் செலுத்திப் பெரிய போர்களில் வெற்றி கொண்டவன் மலையமான் திருமுடிக்காரி.
- ❖ 174:10-13 கபிலரால் பாடப்பட்டவன் போரை விரும்பி வந்த பகைவரைப் புறங்காட்டி ஓடச் செய்பவன்.

சிறுபாணாற்றுப்படை

சிறுபாணாற்றுப்படையில் காரி பற்றி ஒரு பதிவு உள்ளது. அது 110-111 கடையேழு வள்ளல்களில் ஒருவனாகக் கருதப்பட்ட ஓரிக்குதிரை ஓரியோடு, காரிக்குதிரைக் காரியாகிய மலையமான் போர் செய்ய நேரிட்டது என்பதாகும்.

மேற்குறித்த 18 பதிவுகளை நோக்குங்கால் மலையமான் திருமுடிக்காரியின் கொடைப்பண்பைக் காட்டிலும் வீரத்தன்மையே பெருமையாகப் பேசப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் தமிழகத்தை ஆண்ட பெருமைக்குரிய மூவேந்தர்களுள் சேரனும் சோழனும் மலையமானிடம் உதவிபெற விரும்பியுள்ளனர் என்பதுதான்.

மூவருள் ஒருவன் துப்பாகியர் என
ஏத்தினர் தரூஉம் கூழே நும்புடி (புறநா.122:13-14)

என்ற கபிலர் பாடிய பாடலடிகள் மூலம் மலையமான் திருமுடிக்காரியிடம் உதவியைப்பெற வேந்தர்கள் தூது அனுப்பியுள்ளனர் என்பது புலனாகிறது. ஆக மலையமான் திருமுடிக்காரி வேந்தர்களைக் காட்டிலும் வலிமையில் மிக்கு இருந்திருக்கிறான் என்பது தெள்ளத் தெளிவாகிறது. மேலும், வலிமையுடைய வேலையுடைய மலையமான் மட்டும் உதவிக்கு வாராமல் இருந்திருந்தால் சோழன்

இராசசூய வேட்ட பெருநற்கிள்ளியை எளிமையாக வென்றிருக்கலாம் என, தோல்வியடைந்த சேரன் மாந்தரஞ்சேரல் இரும்பொறை கூறியுள்ளான் என்பதை,

கழல்அணிப் பொலிந்த சேவடி நிலம்கவர்பு
விரைந்துவந்து சமம்தாங்கிய
வல்வேல் மலையன் அல்லன் ஆயின்
நல்அமர் கடத்தல் எளிதுமன் நமக்கு (புறநா.125:12-15)

எனும் அடிகள் சான்று பகர்கின்றன. இப்பாடலின்வழிச் சேரனின் தோல்விக்கும் சோழனின் வெற்றிக்கும் குறுநில மன்னனான மலையமான் திருமுடிக்காரியே காரணம் என்கிறார் வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார்.

அகநானூற்றுப் பதிவு

சிவந்த வேலையுடைய முள்ளூர் மன்னனாகிய மலையமான் திருமுடிக்காரி கடையேழு வள்ளல்களில் ஒருவனான வள்ளாண்மை கொண்ட ஓரியைக் கொன்று அவன் ஆண்ட கொல்லி மலையை வேந்தர்களின் ஒருவனான சேர மன்னனுக்கு மீட்டுக் கொடுத்திருக்கின்றான் என்பதை,

முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்இசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈந்த
செவ்வேர்ப் பலவின் பயம்கெழு கொல்லி (அகநா.209:12-15)

எனும் அடிகள் தெளிவுபடுத்துகின்றன. இப்பாடலின்வழிக் கொல்லிமலை முன்னொரு காலத்தில் சேரர்க்குரிய பகுதியாக இருந்திருக்கிறது. பின்பு அக்கொல்லிமலை வலிமையின் பொருட்டு ஓரியின் வசம் ஆளப்பட்டு வந்தது. வில் வித்தையில் தலைசிறந்தவனாக விளங்கியதால் இவனை வல்வில்ஓரி என்று அழைத்தனர். இவனின் வில்லாற்றலை எதிர்த்து நின்று போரிட்டு மீட்கமுடியாத சேரர், மலையமான் திருமுடிக்காரியின் உதவியைப் பெற்று அக்கொல்லி மலையை மீட்டுக் கொண்டனர் என்பது மேற்குறித்த அகநானூற்றுச் சான்றின்வழிப் புலனாகிறது.

மேற்குறித்த பதிவுகளை ஆராயும் போது மலையமான் திருமுடிக்காரி வேந்தர்களைக் காட்டிலும் மிகுந்த வலிமை உடையவனாக இருந்திருக்கின்றான் என்பதை அறியமுடிகிறது. இக்கருத்திற்கு உரையாசிரியர்களின் விளக்கமும் வலுசேர்க்கிறது.

இலக்கண உரையாசிரியர் சங்கர நமச்சிவாயர் உரையில் சோழநாடு என்பதைச் சோணாடு என்றும் பாண்டியநாடு என்பதைப் பாண்டிநாடு என்றும் கூறுவதைப் போல் மலையமான் நாடு என்பது மலாடு என்று மருவி வழங்கும் வழக்கத்தைக் குறிப்பிடுகின்றார். இதன்வழி மலையமான் நாடு வேந்தர்களுடைய நாட்டிற்கு

இணையான நாடு என்பதைத் தெளியலாம். மேலும், இவ்இலக்கணச் சான்று மட்டுமின்றி நாணயவியல் சான்றும் வழிமொழிகிறது.

இதுவரை மலையமான் என்ற பெயருள்ள நாணயங்கள் மூன்று கிட்டியுள்ளன. இவற்றில் இரண்டு நாணயங்கள் திருக்கோவலூரில் கிட்டியவை. மூன்றாவது நாணயம் புதுதில்லியிலுள்ள தேசிய அருங்காட்சியகத்திலுள்ளதாகும். அந்த நாணயத்தை அவர்கள் எங்கிருந்து பெற்றனர் என்பதை அறிய முடியவில்லை. இந்த மூன்று நாணயங்களில் இரண்டில் ஐந்து எழுத்துக்கள் நன்கு அச்சாகியுள்ளன என்கிறார் இரா.கிருஷ்ணமூர்த்தி (2011-8).

இப்படம் இரா.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் சங்ககால மலையமான் நாணயங்கள் எனும் நூலில் இருந்து எடுக்கப்பெற்றது

இப்படத்திலுள்ள நாணயங்களைப் பார்க்கும்போது மூவேந்தர்கள் தங்களது பொருளாதாரச் செல்வாக்கினை நிலைநிறுத்துவதற்கும் பண்பட்ட வேந்தன் என்பதை அடையாளப்படுத்துவதற்கும் வெளியிட்ட நாணயங்களைப் போல் மலையமானின் நாணயங்களும் காட்சியளிக்கிறன. ஆகவே மலையமான் திருமுடிக்காரி வேந்தர்களைக் காட்டிலும் வீரத்திலும் ஈரத்திலும் பண்பிலும் பொருளாதாரச் செல்வாக்கிலும் மிக்கு இருந்ததோடு மட்டுமில்லாமல் வேந்தர்களின் வெற்றி, தோல்வி என்ற தலைவிதியை வரையறுப்பவனாக இருந்திருக்கின்றான் என்பது இக்கட்டுரையின் மூலம் உறுதியாகின்றது.

உதவிய நூல்கள்

1. இராகவய்யங்கார் ரா., தமிழகக் குறுநில வேந்தர்கள், 2009.
2. இளங்குமரன் இரா., புறநானூறு மூலமும் உரையும், 2003.
3. கிருஷ்ணமூர்த்தி இரா., சங்ககால மலையமான் நாணயங்கள், 2011.
4. குருநாதன் வ., புறநானூறு மூலமும் உரையும், 2003
5. சங்கர நமச்சிவாயர் (உ.ஆ.), நன்னூல் நூ.267.
6. சாமிநாதையர் உ.வே(ப.ஆ.), புறநானூறு மூலமும் பழையவுரையும், 1956.

7. சுப்பிரமணியன் ச.வே., சங்க இலக்கியம், எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும், தொகுதி -1, 2010.
8. சுப்பிரமணியன் ச.வே., சங்க இலக்கியம், எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும், தொகுதி -3, 2010.
9. செயபால் இரா. (உ.ஆ.), அகநானூறு மூலமும் உரையும், 2004.
10. துரைசாமிப்பிள்ளை ஔவை.சு., புறநானூறு மூலமும் உரையும், 2003
11. நாகராசன் வி.(உ.ஆ.), குறுந்தொகை மூலமும் உரையும், 2004.
12. பரிமணம் அ.மா., பதிற்றுப்பத்து, 2003
13. பாலசுப்பிரமணியன் கு.வெ.(உ.ஆ.), நற்றிணை மூலமும் உரையும், 2004.
14. பாலசுப்பிரமணியன் கு.வெ.(உ.ஆ.), புறநானூறு மூலமும் உரையும், 2004.
15. மாதையன் பெ., சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும், 2004.

சி.வை.தா.வுக்கான அடையாளமும் : செய்தனவும் செய்ய வேண்டுவனவும்

மு.முனீஸ்மூர்த்தி
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி -17

சி.வை.தா.வின் பிறப்பு ஈழதேசத்தில் அமைந்தாலும் தம் வாழ்நாளின் எழுபது சதவீத நாட்களை அவர் இந்திய தேசத்தில் (தமிழகத்தில்) தான் செலவிட்டுள்ளார். 1832இல் பிறந்த சி.வை.தா. 1854வரையே ஈழத்தில் வாழ்ந்துள்ளார். அதன் பிறகு தமிழகத்தில் குடியேறியவர் தன் வாழ்நாளின் இறுதிவரை தமிழகத்திலேயே வாழ்ந்துள்ளார். இடைப்பட்ட காலங்களில் குடும்பப் பொறுப்புக் காரணமாக ஈழதேசம் சென்றாலும் அப்பயணம் மாதக்கணக்கு எனும் காலஅளவில் தான் நிகழ்ந்துள்ளது. தினவர்த்தமானியின் ஆசிரியப் பொறுப்பேற்கச் சென்னை வந்த சி.வை.தா. சென்னைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுப் பல்வேறு பொறுப்புகளுக்கு உரியவராகின்றார். அவ்வகையில் சி.வை.தா. வகித்துள்ள பணிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.



மேற்குறித்த பணிகளுக்கிடையிலும் பணி ஓய்வு பெற்ற பின்பும் தான் சி.வை.தா. பதிப்புப் பணிகளைத் திறம்படச் செயலாற்றியுள்ளார். இந்நிலையில் இவர்தம் பணிகளைப் போற்றும் வண்ணம், அடுத்தடுத்த தலைமுறையினரும் இவரது பணிகளை நினைவுகூரும் வண்ணம் ‘உரிய அடையாளம்’ உருவாக்கப் பெற்றுள்ளனவா என்பது பற்றியும் விவாதிக்க வேண்டியுள்ளது. ‘ஒண்ட வந்த பிடாரி

ஊர்ப்பிடாரியை விரட்டிய கதைபோல' என்றொரு நாட்டார் வழக்கமொழி உண்டு. ஆனால் சி.வை.தா.வின் வாழ்வில் மட்டும் இவ்வழக்கமொழி தலைகீழாகவே தொழிற்பட்டுள்ளது. அவர் ஈழதேசத்தார் என்பதற்காகவும் கிறித்தவத்திலிருந்து மதம் மாறியவர் என்பதற்காகவும் அவர் வாழ்ந்த காலத்திலேயே அவருக்குப் பல்வேறு நிலைகளில் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. அவர்தம் பணிகளை மட்டந்தட்டும் நிகழ்வுகளும் அரங்கேறியுள்ளன. (உ.வே.சா.விற்கு அமைந்ததுபோல்) வலுவான மாணவர் பரம்பரை அமையாததும் இவரது பணியை வெளியுலகம் அறியக் காலதாமதம் ஏற்பட்டது எனலாம். ஆசிரியப் பணியில் குறைந்த காலமே செயலாற்றி, எஞ்சிய காலங்களில் நிருவாகத்துறை, நீதித்துறையில் செயலாற்றியதால் இவர்க்கெனத் தனி மாணவர் பரம்பரை உருவாக வாய்ப்பின்றிப் போனது. இவரது பணிகளைப் பாராட்டும் வகையில் இலங்கை அரசு முப்பதாண்டுகளுக்கு முன்பு சிறப்பு அஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப்பித்தது.

தமிழக அடையாளம் : செய்தன

தமிழகத்தில் சி.வை.தா.வுக்கான காட்சி வடிவிலான, கருத்து வடிவிலான அடையாளங்கள் 'அரிது' என்று தான் சொல்லமுடியும். (ஆய்வாளரின் அறிவுநிலைக்கு எட்டிய வகையில்) சி.வை.தா.வுக்கான தமிழக அடையாளங்கள் இப்பகுதியில் முன்வைக்கப் பெறுகின்றன.

- *சென்னைப் பல்கலைக்கழக நிருவாகக் கட்டிடத்தில் பல்கலைக்கழக முதல் பட்டதாரிகள் நால்வருள் ஒருவர் எனும் அடையாளத்துடன் சி.வை.தா.வின் ஆளுயர நிலைப்படம் பொருத்தப்பட்டுள்ளது.*
- *தஞ்சையில் உருவாக்கப் பெற்றுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் 'தமிழறிஞர் வரிசை' எனும் நிலையில் சி.வை.தா.வின் நிலைப்படம் பொருத்தி வைக்கப் பெற்றுள்ளது.*
- *கருத்து வடிவ அடையாளம் எனும் நிலையில் சென்னை – உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சி.வை.தா.வின் பதிப்புப் பணிகளை மதிப்பிடுவதாக ஒரு கருத்தரங்கமும் (2004) ஓர் அறக்கட்டளைச் சொற்பொழிவும் (2010) நிகழ்ந்து, அவை, முறையே 2008, 2010 ஆம் ஆண்டுகளில் நூல்வடிவம் பெற்றுள்ளன. குறிப்பாக, உ.வே.சா. பெயரில் நிறுவப் பெற்றுள்ள அறக்கட்டளைச் சொற்பொழிவில் சி.வை.தா.வைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தப் பெற்றிருப்பது போற்றுதலுக்குரியதாக அமைகின்றது.*
- *ஆங்கிலேய அரசாங்கம் சி.வை.தா.வுக்கு 'ராவ்பகதூர்' எனும் உயரிய பட்டத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளது.*

தவிர்க்கவியலா நிலையில் (வாசகப் புரிதல் கருதி) உ.வே.சா.வுக்கான தமிழக அடையாளங்கள் ஒப்பீட்டுக்காகப் பின்வருமாறு முன்வைக்கப் பெறுகின்றன (உ.வே.சா.வை வம்புக்கிழுக்கும் முயற்சியல்ல இது).

- ✓ பள்ளிக் கல்விப் பாடத்திட்டத்திலேயே காலத்தால் அழிக்கவியலாக் கருத்துவடிவிலான 'தமிழ்த் தாத்தா' எனும் அடையாளம்.
- ✓ பணியாற்றிய கல்லூரியின் முகப்பில் முழுவுருவச் சிலை.
- ✓ உ.வே.சா. பிறந்தகமான உத்தமதானபுரம் நினைவு இல்லத்தைப் பாரம்பரிய அடையாளமாக அரசு ஏற்றுப் போற்றி வருதல் (அதேவேளை, உ.வே.சா. வாழ்ந்த தியாகராச விலாசம் – இல்லம் கேட்பாரற்றுக் கிடக்கின்ற நிலைமை!).
- ✓ தனி அறக்கட்டளையின்கீழ் இயங்கும் வகையிலான (இந்தியக் குடியரசுத் தலைவரால் திறக்கப் பெறும் அளவுக்குச் செல்வாக்குப் பெற்ற) நூலக உருவாக்கம். அதன்வழி, உ.வே.சா. பதிப்பித்த நூல்களை மீள்பதிப்புச் செய்தல்.
- ✓ பல்வேறு கல்லூரி, பல்கலைக்கழகங்களில் நினைவு அறக்கட்டளை உருவாக்கம். அதன்வழிச் சொற்பொழிவு நிகழ்த்தம்.
- ✓ தனிமனித விருப்ப நிலையில் 'உ.வே.சா. : சங்க இலக்கியப் பதிப்புகள்', 'உ.வே.சா. : காப்பியப் பதிப்புகள்' எனும் வரிசையில் நூல்கள் வெளியிட்டுள்ளமை.
- ✓ உயராய்வு நிறுவனங்கள் கருத்தரங்கம் நிகழ்த்தி (அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 16,17.3.2011) ஆய்வுக் கோவைகள் வெளியிடல்.
- ✓ இந்திய அரசு சிறப்பு அஞ்சல்தலை வெளியிட்டுள்ளமை.
- ✓ இணையப் பயன்பாட்டு நிலையில் உ.வே.சா. பெயரில் 'செம்மொழித் தரவகம்' உருவாக்கம்.
- ✓ கல்வெட்டு, சுவடி தொடர்பான தொல்லியல்சார் ஆய்வாளர் ஒருவருக்கு 2011 முதல் மாநில அரசு சார்பில் 'உ.வே.சா.' விருது வழங்கி வருகின்றமை.
- ✓ இன்ன பிற...

[உ.வே.சா.வைப் போற்றும் வகையிலான மேற்குறித்த அடையாளங்களுக்கு உ.வே.சா. முழுமையும் தகுதி வாய்ந்தவர் என்பதில் எவர்க்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.]

அடையாளம் : சி.வை.தா.வுக்குச் செய்ய வேண்டுவன

19 ஆம் நூற்றாண்டின்